மணிக்கொடி

தொகுதி 3 மலர் 7

ஜூலை 1937

758

Regd. No. M. 2573.



உ

# பாலவித்யா.

(மாதப் பத்திரிகை)

5 AUG 1932

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"
"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது அறிவு"



| தொகுதி III | 1932ளு ஜூலைமீ<br>ஆங்கிரஸளு ஆடிமீ | பகுதி VII |
|---|---|---|



## ஹாஸ்ய விநோதங்கள்.

(BY T. S. P. SARATHY).

ஒரு உபாத்தியாயர், புதிதுபுதிதாய்க் கண்டுபிடிக்கப்படுகிற யந்திரங்களைப்பற்றி வெகு நேரம் சொல்லிவிட்டு, ஒரு பையனை எழுந்திருக்கச் சொல்லி "கிட்டு! நீ இப்பொழுது என்ன யந்திரத்தைக் கண்டு பிடிக்க விரும்புகிறாய்?" என்றார்.

**கிட்டு :—** ஒரு பொத்தானை அழுக்கினவுடன் என்னுடைய வீட்டுப் பாடங்களையெல்லாம் சரியாய் செய்துமுடிக்க ஒரு யந்திரம் கண்டுபிடிப்பேன்.

**உபா :—** சீனு ! நீ என்ன கண்டுபிடிக்க விரும்புகிறாய் ?

**சோம்பேறிச்சீனு :—** அந்தப் பொத்தான் தானாய் அழுக்கிக்கொள்ள ஒரு யந்திரத்தை அமைப்பேன்.

* * * * *

செட்டி நாட்டில் ஏலம் நடந்தது. சில சாமான்கள் விற்பனையான பின் ஒருவர் வந்து ஏலக்காரருடன் ரகஸியமாய் ஏதோ பேசிவிட்டுப் போனார். அவர் போனதும் ஏலக்கார[illegible] இங்கு ஒரு பெரிய மனிதர் இப்பொழுது [illegible] போக்கடித்துவிட்டதாய்க் கூறி[illegible] திருப்பிக் கொடுப்போ[illegible]க்கு ரூ. 50 கொடுக்கப்படும். [illegible] என்றா[illegible]

188794

ஏலம் கேட்க வந்திருந்த செட்டியார் ஒருவர் "அறுபது ரூபாய்" என்று கூவினர்.

* * * *

(By C. V. PICHAI.)

யாசகர் :—ஐயா ! திருப்பதி போகனும் என்று பிரார்த்தனை. ஏதோ உங்களால் முடிந்ததை செய்தால் புண்யமுண்டு.

கிட்டு : என் ஐயா ! நேற்றுதானே இங்கு வந்து காசு வாங்கிக்கொண்டு போனீர். மறுபடியும் என்னிடமே வந்தால் ?

யாசகர் :—ஆமாம் ; நான் கொடுக்காத லோபிகளிடம் யாசகத்திற்குப் போவதில்லை.

கிட்டு :—அவர்களுக்குச் சேரவேண்டிய புண்ணியத்தையும் நானே அபகரித்துக்கொள்ளுவது சரியல்ல. கிடைக்கக்கூடிய புண்ணியத்தில் அவர்களுக்கும் கொஞ்சம் வீதமிருக்கட்டும்.

* * * * *

பாலு :—என்டா குப்பு ! ரொம்ப இளைப்பாயிருக்கிறாயே. ஏதாவது டானிக் வாங்கி சாப்பிடுகிறதுதானே.

குப்பு :—எவ்வளவோ சாப்பிட்டாய்விட்டது. உடம்பு மாத்திரம் அப்படியேதானிருக்கிறது.

பாலு :—அப்படியானால் ஒரு மருந்திருக்கிறது. இரண்டுமாதம் கவலையற்று காபிகிளப்பில் வேலைக்கமரேன்.

* * * * *

ரெங்கனாதாசாரியார் :—என்ன நாராயணஸ்வாமி செட்டியார்வாள் ! பணம் கொடுத்து வருஷம் ஒன்று ஆகப்போகிறது வீடு கொள்ளாமல் மூர் மார்க்கெட் குப்பையை விலைக்கு வாங்கிப்போட்டுக் கொண்டு இன்னமும் சால்ஜாப் சொன்னால் அது கிடக்கட்டும் இந்த மாத சம்பளத்தை என்ன செய்தீர் ?

செட்டியார் :—இந்த மாதம் எனக்குச் சம்பளமே கொடுக்கவில்லை. வேண்டுமானால் டைபிஸ்டைக் கேட்டுப்பாரும்.

டைபிஸ்டு : ஆமாம் ; ஸார் ! அவர் சொல்வது சரிதான். அவர் சம் [illegible] இரண்டுமாதமாகும். இரண்டு மாதத்தி [illegible] அட்வான்ஸாக வாங்கியது தவிர இப்பொழுது ஒன்று [illegible] கவில்லை.

* * * * *



பாலகி :—அப்படிப்பட்ட துரதிருஷ்டம் என்ன ? அதை விபரமாய்ச் சொல்லவேண்டும். (என்று ஆவலாகக் கேட்டான்.)

அமிர்த :—நீ என்னை நம்பி உண்மையைச் சொல்லவில்லை. ஆகையால் நானும் அதைச் சொல்லத் தயாராகயில்லை.

பாலகி :—நான்தான் நீர் சொன்னதை ஒப்புக்கொண்டேனே.

அமிர்த :—அதன் காரணத்தை நீ சொல்லவில்லையே.

பாலகி :—அதைச் சொல்ல சக்தியற்றவனாகச் செய்யப்பட்டிருக்கிறேன்.

அமிர்த :—நானும் உண்மையைச் சொல்லத் தயாராகயில்லை.

பாலகி :—என் விஷயத்தைப் போலீசுக்குச் சொல்லாமலிருக்க உம்மைப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அமிர்த:—அதுவிஷயத்தில் எனக்கு யாதொரு சம்பந்தமும் கிடையாது. அது போலீஸ்காரர்கள் வேலை.

பாலகி :—நீர் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லமாட்டாமல் ஒப்பந்தத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறேன்.

அமிர்த :—ஒரு பெண்ணின் உயிருக்கே ஆபத்து நேரிட்டிருக்கும் இந்த சமயத்திலா ஒப்பந்தத்தை கவனிப்பது?

பாலகி :—ஒரு பெண்ணின் உயிரா ? யாருடைய உயிருக்கு ஆபத்து ?

அமிர்த :—யாரா ? காமாக்ஷிக்குத்தான் ஆபத்து.

பாலகி :—அப்படியானால் அவளைப்பற்றிய சமாசாரங்களை நீர் அறிவீர்போல் காண்கிறது.

அமிர்த :—நீயும் அவள் சிநேகிதன்போல் காண்கிறது. மேலும் நீ நேற்றைய இரவு வில்லிவாக்கத்திலுள்ள அவள் வசிக்கும் வீட்டிற்குச் சென்று அவளுடன் பேசிக்கொண்டிருக்கவில்லையா ?

இதைக் கேட்டதும் பாலகிருஷ்ணன் பிரமித்துப் போய்விட்டான். காமாக்ஷியின் இருப்பிடம் அதி ரகஸ்யமாயிருப்பதாய் தான் எண்ணியிருக்க, இம் மனிதனுக்கு அது எப்படித் தெரிந்ததென்று ஆச்சரியமுற்றான்.

அவனது ஆச்சரியத்தைக் கண்ட அமிர்தலிங்கம் அவனைப் பார்த்து "இதிலிருந்து நான் ஒன்றையும் தெரிந்துகொள்ளாமல் பேசவில்லை என்று தெரிகிறதா? அதோடு காமாக்ஷி இப்பொழுது மைலாப்பூரில் நோயுற்று பிராணாபத்திலிருக்கும் உனது நண்பன் திருவேங்கடத்தின் காதலியல்லவா? அவ்வயோக்கியர்கள் செய்யும் சதியாலோசனைகள் உங்களுக்கு ஒன்றுமே தெரியாது." என்றான்.

பாலகி:—சதியாலோசனையா? அது எங்களுக்குத் தெரியாதே. அதை தயவுசெய்து சொல்லவேண்டும். அவர்களின் எண்ணம் என்னவோ?

அமிர்த:—அதை நான் ஏன் சொல்லவேண்டும்?

பாலகி:—எங்கள் நன்மையின்பொருட்டே.

அமிர்த:—அவைகள் உனக்குத் தெரியவேண்டுமானால், நீ உன் உண்மைகளை மறைக்காமல் முதலில் சொல்லவேண்டும்.

பாலகி:—அப்படிச் சொல்லாவிடில்—?

அமிர்த:—அதைப்பற்றி பிறகு பேசவேண்டியதில்லை. உங்களுக்கு நன்மை செய்யவே வந்தேன். வலுவில் வந்த ஸ்ரீதேவியை காலால் உதைத்துத் தள்ளுவதுபோல் நீ என்னை நம்பாமல் உதாசீனம் செய்வதாயிருந்தால் உங்களுக்கு ஒத்தாசை செய்ய என்னால் முடியாது. மேலும் நீங்கள் ஆபத்துக்கு உள்ளாவதும் நிச்சயம்.

பாலகி:—எங்களுக்கு ஒத்தாசை செய்யவா வந்தீர்? எவ்வித ஒத்தாசை செய்ய உத்தேசம்?

அமிர்த:—நீங்கள் உண்மையைக் கண்டுபிடிக்கும் விஷயத்தில் ஒத்தாசை செய்யவே வந்தேன். அவர்கள் சதியாலோசனை உனக்குத் தெரியாதென்று சொன்னாய். ஆகையால் அவர்கள் ஜயமடைவது நிச்சயம்.



பாலகி:—அவர்கள் அபஜயமடையும்படி உங்களால் என்ன செய்யமுடியும்?

அமிர்த:—என்னால் என்ன செய்யமுடியுமா? நான் ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் அவர்கள் சூழ்ச்சிகள் அட்டையால் கட்டிய வீட்டைப்போல் ஒரு நிமிஷத்தில் அழிந்துவிடுவதோடு, அவர்கள் உங்கள் காலில்விழுந்து தங்களைக் காப்பாற்ற வேண்டிக்கொள்ளுவார்கள். பாலகிருஷ்ணா! நீ மௌனம் சாதிப்பதாகத் தீர்மானித்திருக்கிறபடியால் நானும் மௌனமாயிருக்கத் தீர்மானித்துவிட்டேன்.

பாலகி:—காமாக்ஷிப்பெருமாட்டி ஆபத்திலிருப்பதாகச் சொன்ன நீர் இம்மாதிரி மௌனமாயிருப்பது ஆச்சரியமாயிருக்கிறது.

அமிர்த:—நான்மட்டும் என்ன செய்கிறது? உன் ஒத்தாசையும் இருந்தால்தான் அவர்களை ஒழிக்கமுடியும். எனக்குத் தெரியாத சில விஷயங்கள் உனக்குத் தெரிந்திருக்கலாம். நான் கேட்கும் விஷயங்களுக்கு ஒளிக்காமல் பதில் சொன்னால் அதைக்கொண்டு அவர்களை வெகு சுலபமாக ஒழித்துவிடலாம்.

பாலகி:—அப்படிச் சொல்லும்பக்ஷத்தில் எனக்கு அபாயமேற்படுமே.

அமிர்த:—உனக்கு யார் கெடுதி செய்வார்?

பாலகி:—அரங்கநாதன் கண்டிப்பாகக் கெடுதி செய்தே தீருவான்.

அமிர்த:—நான் அப்படித்தான் நினைத்தேன். உண்மையை என்னிடம் நீ சொல்லுவாயாகில் அவனிடம் நீ பயப்படத் தேவையில்லை.

பாலகிருஷ்ணன் இதைக் கேட்டுத் தயங்குவதைக் கண்ட அமிர்தலிங்கம் "பாலகிருஷ்ணா! விஷயங்கள் வெகு

சீக்கிரம் நடைபெறவேண்டியிருக்க நீ ஏன் தயங்குகிறாய்? உண்மையைச் சொல். காலதாமதம் செய்ய இது சமயமல்ல. என்னை நம்பு. உனக்கு யாதொரு கெடுதலும் நேரிடாது.” என்றான்.

பாலகி:—காமாக்ஷி அந் நால்வர்கள் கையிலும் அகப்பட்டுக் கொண்டு தவிக்கிறாள்.

அமிர்த:—அது எனக்குத் தெரியும். ஆனால்—

பாலகி:—ஆனால் என்ன?

அமிர்த:—அவள் பயம் இன்றோடு ஒழிந்தது. நீ உனக்குத் தெரிந்த விஷயங்களை ஒளிக்காமல் சொன்னால் நாமிருவரும் சேர்ந்து அவ்வயோக்கியர்களை ஒழித்து விடலாம்.

பாலகி:—அப்படியானால் என் ஒப்பந்தம் என்னவாகும்?

அமிர்த:—அவ்வயோக்கியர்களோடா ஒப்பந்தம்? நன்றாய்ச் சொன்னாய். அவர்களை இந்த நிமிஷமே காட்டிக் கொடுத்துவிடவேண்டாமா? அவர்கள் உன்னை எந்த சமயத்திலும் போலீசுக்குக் காட்டிக்கொடுக்க பின்வாங்கமாட்டார்களே.

பாலகி:—அப்படிச் செய்யவா அவர்கள் உத்தேசம்?

அமிர்த:—ஆம்; தங்கள் காரியமாகும்வரையில் பொருத்திருந்து உன் ஒத்தாசை தேவையில்லை என்பதைக் கண்டுகொண்டவுடன் உன்னை ஒழித்துவிடுவார்கள் என்பது நிச்சயம்.

பாலகி:—அவர்கள் யாரென்பதும் அவர்களின் நடத்தைகளும் எண்ணங்களும் உமக்கு நன்றாய்த் தெரியும் போலிருக்கிறதே.

அமிர்த:—அவர்களை நான் நன்றாய் அறிவேன். காரியமாக வேண்டியிருந்தால் அவர்கள் எவ்வளவுதூரம் செய்வார்களென்பதையும் அறிவேன். ஆகையால் நாமிருவரும் சேர்ந்துகொள்ளுவதுதான் மேலானது. நீ அவர்க



ளிடம் எப்படி அகப்பட்டுக்கொண்டாய்? அவர்களுக்கு எவ்விதத்தில் ஒத்தாசையாயிருந்தாய்? காமாக்ஷியா உனக்கு அவர்களை அறிமுகம் செய்துவைத்தாள்? இவைகளை விவரமாகச் சொல்.

பாலகி:—நான் ஒப்பந்தம் செய்துகொண்டபிறகுதான் காமாக்ஷிப் பெருமாட்டியைத் தெரியும்.

அமிர்த:—அது இருக்கட்டும். முதலில் உன் விஷயத்தைச் சொல். பிறகு உலகத்தில் ஒருநாளும் கேட்டிராததும் நடந்திராததும் புத்திக்கு எட்டாததுமான அந் நால்வர் செய்திருக்கும் சூழ்ச்சிகளைப்பற்றிச் சொல்லுகிறேன்.

பாலகி:—எனக்கு ஜாஸ்தியாக ஒன்றும் தெரியாது. நான் மனமொப்பி அவர்களுக்கு ஒத்தாசையாக இருந்ததில்லை. அவர்கள் கருத்து என்னவென்பதே எனக்குத் தெரியாது. அதைக் கண்டுபிடிக்க அநேகம் தடவை முயன்றேன். ஒன்றும் பலிக்கவில்லை.

அமிர்த:—அதை என் ஒத்தாசையில்லாமல் கண்டுபிடிக்க உங்களால் முடியாது. மேலும் நான் அரங்கநாதனை அறிந்திருப்பதுபோல் நீங்கள் அறியமாட்டீர்கள். முதலில் அவன் உனக்கு எப்படிச் சிநேகிதனானான்?

பாலகிருஷ்ணன் தனது நண்பன் மாணத் தருவாயிலும் காமாக்ஷி ஆபத்திற்குள்ளாயிருப்பதையும்பற்றி சற்று யோசித்தான். இவனிடமிருந்து உண்மையைத் தெரிந்துகொண்டால் அவர்களைக் காப்பாற்ற உதவுமென்று எண்ணினான் ஆனால் அமிர்தலிங்கத்தை முற்றும் நம்பவில்லை. அவ்வயோக்கியர்களின் விரோதி என்பதைமட்டும் தெரிந்துகொண்டான். முடிவாக தன் ரகசியத்தைச் சொல்லுவதைத் தவிர வழியில்லையென்பதைக் கண்டுகொண்டு, தான் தற்கொலை செய்துகொள்ள தோட்டத்தைவிட்டுப் புறப்பட்டது முதல் தான் ஒப்பந்தம் செய்துகொண்டவரையில் விஸ்தாரமாகச் சொன்னான்.

அமிர்த: ஆகையால் உன்னை இவ்விதம் வசிக்கும்படி அரங்கநாதனா நிர்ப்பந்தப்படுத்தினான்?

பாலகி:—அவனால் கொலைசெய்யப்பட்ட பத்மநாபனைப் போல் வசிக்க எனக்கு ஏராளமான பணமும் கொடுத்துவருகிறான்.

அமிர்த.—பத்மநாபன் கொலைசெய்யப்பட்டானா? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே. அதைப்பற்றி விஸ்தாரமாகச் சொல்லு. (என்று ஆச்சரியத்தோடு கேட்டான்.)

பாலகிருஷ்ணன் தானும் திருவேங்கடமும் அரங்கநாதன் வீட்டிற்குச் சென்றதையும் அவ்விடம் ஓர் பிரேதத்தைக் கண்டு அதைப் பரிசோதித்துப் பார்க்க அது பத்மநாபன் பிரேதமென்று நிச்சயம் செய்துகொண்டதையும் [illegible]மாகச் சொல்லி அது தன்னைப் போலிருக்கும்படி பணம் கொடுத்த [illegible]தையும் சொன்னான்.

அமிர்த: அப் பிரேதம் என்னவாயிற்று?

பாலகி:—அதை அரங்கநாதன் மறைத்துவிட்டான். நானும் காமாக்ஷியும் போய்ப் பார்க்க அது அங்கு காணப்படவில்லை.

அமிர்த:—பாலகிருஷ்ணா! அவர்கள் நடவடிக்கைகள் உனக்குத் தெரியாது. அவர்கள் பலே பேர்வழிகள். எதையும் மிக்க ஜாக்கிரதையாகவே செய்வார்கள். கொலைபாதகர்கள்.

பிறகு அரை மணி நேரம்வரையில் பாலகிருஷ்ணன் நடந்தவைகளைச் சொன்னான். அதை அமிர்தலிங்கம் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்து நடுவில் தனக்குச் சந்தேகமானவைகளைக் கேட்டுத் தெரிந்துகொண்டு "பாலகிருஷ்ணா! நீ உனது பெயரை மாற்றிக்கொண்டு இங்கு வந்த பிறகு உன்னை ஒருவரும் அடையாளம் கண்டுகொள்ளவில்லையா?" என்றான்.

பாலகி:—உம்மைத்தவிர மற்றவர்கள் யாரும் உண்மையைக் கண்டுபிடிக்கவில்லை.



அமிர்த:—உன்னை ஒருவரும் வந்து பார்க்கவில்லையா?

பாலகி:—சிங்கப்பூர் சாந்தலிங்கமென்பவன் வந்திருந்தான்.

அமிர்த:—சாந்தலிங்கமா? என்ன சொன்னான்? உன்னைப் பத்மநாபனென்றே எண்ணிக்கொண்டிருக்கிறானா?

பாலகி:—ஆம்; கோமளாம்பாளென்னும் கன்னிகையின் விஷயமாக என்னை பயமுறுத்தினான். நான் அவளை ஏமாற்றிக் கொண்டுவந்துவிட்டதாகக் குற்றம் சாட்டுகிறான்.

அமிர்த:—நீ அவனிடம் என்ன சொன்னாய்?

பாலகி:—நான் அக் குற்றத்தை மறுத்தேன். அவன் என்மேல் பழிவாங்குவதாய்ச் சொல்லிப் போனான்.

அமிர்த:—அப்படியா? அவன் இங்கு வந்திருப்பது எனக்குத் தெரியாது. அவன் வந்திருப்பதினால் விவகாரம் கொஞ்சம் சிக்கலாகிவிட்டது.

பாலகி:—நமக்கா?

அமிர்த:—இல்லை. அரங்கநாதனுக்கு.

பாலகி:—ஐயா! காமாக்ஷிப் பெரு[illegible]டி காப்பாற்றப்படவேண்டுமென்றும் நான் அ[illegible]யர்களிடமிருந்து விடுபடவேண்டுமென்றுமே இவ்வுண்மைகளை உம்மிடம் சொன்னேன். முதலில் எனக்கு யாதொரு விஷயமும் தெரியாது. நான் அவர்களின் கெட்ட நடக்கைகளுக்கு உடந்தையாய் இருப்பதாக இப்பொழுதுதான் தெரிந்துகொண்டேன். நான் பத்மநாபனைப்போல் இருப்பதின் காரணம் என்ன?

அமிர்த:—[illegible] உனக்கு உண்மை தெரிந்துவிட்ட[illegible] நாங்கள் காரியத்திற்கு [illegible] [illegible] ஆபத்தில் சிக்கிக்கொள்ள [illegible] பயந்து உன்னிடம் உண்மையைச் சொல்லாமல் [illegible] [illegible].

பாலகி:—அவர்களின் முக்கிய எண்ணம் என்ன?

அமிர்த:—அவசரப்படாதே. எல்லாம் சமயத்தில் தெரிந்து கொள்வாய். நீ அப் பிரேதத்தினிடம் கண்ட கடிதங்களில் என்ன எழுதியிருந்தது? (பாலகிருஷ்ணன் அக் கடிதத்தின் விபரங்களைச் சொன்னான்.) ஓகோ! அப்படியா? நான் எண்ணியதைவிட அவர்கள் மிக்க ஜாக்கிரதையாகவும் பிறர் நம்பும்படியாகவும் இக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் மிகவும் அபாயகரமானவர்கள். (தான் பாலகிருஷ்ணனைப் பின் தொடர்ந்து வில்லிவாக்கம் போய் காமாக்ஷியைக் கண்டதையும் அவ்விடம் தியாகராஜன் வந்ததையும் சொல்லாமல் பாலகிருஷ்ணா! நீ தியாகராஜனைப்பற்றிச் சொன்னாயே. இப்பொழுது காமாக்ஷி இருக்குமிடம் அவனுக்குத் தெரியுமோ? என்று கேட்டான்.)

பாலகி:—அது அவனுக்குத் தெரியாதென்பதை நிச்சயமாய் நம்பலாம்.

அமிர்த:—அதுதான் இல்லை. அவள் இருப்பிடத்தை அவன் கண்டுபிடித்துவிட்டான்.

பாலகி:—கண்டுபிடித்துவிட்டானா? (என்று பயத்தோடும் ஆச்சரியத்தோடும் கேட்டான்.)

அமிர்த:—ஆம். அவன் பிறரறியாமல் அவளைக் கவனித்துக்கொண்டுவருகிறான். ஆனால் அவனது எண்ணம் தெரியவில்லை.

பாலகி:—இது உமக்கு எப்படித் தெரியும்? யார் சொன்னார்கள்?

அமிர்த:—ஒருவரும் சொல்லவில்லை. நானே அவனை அன்று பார்த்தேன்.

பாலகி:—தாமும் அங்கே சென்றிருந்தீரா?

அமிர்த:—ஆம்.



பாலகி:—அப்படியானால் அது விஷயத்தைக் காமாக்ஷிக்கு உடனே தெரியப்படுத்தவேண்டும். அவளை ஜாக்கிரதையாய் இருக்கும்படி சொல்லவேண்டும். உமது அபிப்பிராயம் என்ன?

அமிர்த:—இந்த சமயம் அவளைக் கலவரப்படுத்தவேண்டாம். திருவேங்கடத்தின் கவலையே அவளுக்குப் போதும். இப்பொழுது அவர்கள் அவளைக் கிணற்றில் தள்ளிக் கொல்ல எத்தனித்த விஷயத்தை நான் தெரிந்துகொண்டதே போதும்.

பாலகி:—ஆனால் இதை அவளுக்குச் சொல்லவேண்டாமா?

அமிர்த:—இன்றைக்கு வேண்டாம். பிறகு பார்த்துக் கொள்ளலாம். இவ் விஷயங்களைப்பற்றி ஆலோசிக்க கொஞ்சம் அவகாசம் வேண்டும். மேலும் இன்னும் சில விஷயங்களைக் கண்டறியவேண்டும். ஆகையால் நான் இப்பொழுது போய்வருகிறேன். நாளைப் பகல் ஒரு மணிக்கு உன்னை வந்து காண்கிறேன். நீ வெளியே போகாமல் இங்கேயே இருக்கவேண்டும். அப்பொழுது நீ தெரிந்துகொள்ள விரும்பும் விஷயங்களைச் சொல்லுகிறேன்.

பாலகி:—காமாக்ஷி விஷயத்தில் என்ன செய்யலாம்?

அமிர்த:—நீ வில்லிவாக்கம் போய் அவளை வெளியே போகாமல் இருக்கும்படி ஏற்பாடுசெய். ஆனால் தியாகராஜன் அவளைக் கண்டுவிட்டதாகமட்டும் சொல்லாதே. அரங்கநாதன் வீட்டிற்குப்போய் அவர்கள் ஓடிவிடாமலிருக்கிறார்களாவென்பதைத் தெரிந்துகொள். அது எனக்கு முக்கியமாய்த் தெரியவேண்டும். அதைத் தெரிந்துகொண்டுதான் நான் என் வேலையைச் செய்யவேண்டும்.

பாலகி:—இன்று சாயங்காலம் ஏதாவதொரு காரணத்தை வைத்துக்கொண்டு அங்கே போய் விஷயத்தைத் தெரிந்துகொள்ளுகிறேன்.

அமிர்த:—அவ் விஷயத்தை உடனே எனக்கு இந்த விலாசத்திற்குத் தெரியப்படுத்து. அவர்கள் உனக்குக் கெடுதல் செய்ய உத்தேசித்திருக்கிறபடியால் நீ உன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஜாக்கிரதையாய் இரு. (என்று சொல்லித் தன் மேல்விலாசத்தைச் சொல்லிவிட்டு வெளியே சென்றான்.)

---

## அத்தியாயம் 27.

---

இது நடந்த மறுநாட் காலை சுமார் பதினொருமணிக்கு பாலகிருஷ்ணன் ஆகாரம் செய்துவிட்டு வில்லிவாக்கம் போகத் தயாராக இருக்கும் சமயத்தில் சின்னு ஓர் பெண்மணியை உள்ளே அழைத்துவந்து கதவை மூடிக்கொண்டு சென்றான். வந்த பெண்ணுக்கு சுமார் பதினாறு வயதிருக்கலாம். விசாலமான கண்களும், சுருண்டு அடர்ந்து கருத்த கூந்தலும், சிவந்த மேனியும், பார்ப்பவர்கள் பிரமிக்கத்தகுந்த ரூபலாவண்யமும், கொஞ்சம் குட்டையாயும் இருந்ததோடு சர்வாபரணபூஷிதையாயுமிருந்தாள். ஆனால் அவள் கழுத்தில் மாங்கல்யமில்லாமல் நெற்றியில் திலகமிட்டிருப்பதைப் பார்க்குமளவில் அவள் கன்னிகை என்று நன்றாய் விளங்கும். அவள் கொஞ்சம் அச்சத்தோடு தயங்கித் தயங்கி பாலகிருஷ்ணன் சமீபம் வர, அவள் யாரென்பதைக் கண்டுகொண்ட பாலகிருஷ்ணன் தன் நாற்காலியிலிருந்து எழுந்து ஆச்சரியத்தினால் பேச நாவெழாமல் பிரதிமைபோல் நின்றான். தான் ஒருபொழுதும் காணப்போகிறதில்லையென்று நினைத்திருந்த அப் பெண் தன்னிடம் வரவேண்டிய காரணமென்ன என்பதை அறியாமல் திகைத்தான். சில மாதங்களுக்குமுன் ஆனந்தமாகவும் குதூகலமாகவும் கழிந்த காலங்கள் அவளைக் கண்டவுடன் அவனது நினைவிற்கு வந்தன. உடனே "பத்மாக்ஷி! வா. ஏது இவ்வளவுதூரம் என்னைத் தேடிவந்தது?" என்று இனிமையாக சந்தோஷமான முகத்துடன் அவளைக் கேட்டான்.



பத்மாக்ஷி பதிலொன்றும் சொல்லாமல் தலை குனிந்துகொண்டு நின்றாள். பாலகிருஷ்ணன் ஒண்டியாய் சிறை வைக்கப்பட்டவன்போல சுந்தர விலாசத்தில் ஓர் அறையில் இருக்கும்போதுகூட அவளது முகமும் ஒருநாளும் மறக்க முடியாத அவளது அழகிய மேனியும் அனேகம் தடவைகளில் அவன் கண்முன் நின்றன. அவன் அவளை அவ்விதமாகக் காதலித்திருந்தபோதிலுங்கூட அவனை இக் கதிக்கு உள்ளாக்கியது அவளும் அவளது நன்றியற்ற ஸகோதரனுமல்லவா? அவன் தன் கைப் பொருளை இழந்துவிடுவானென்று தெரிந்திருந்துங்கூட அவனைச் சூதாட்டத்திலும் பந்தயங்களிலும் தலைகால் தெரியாமல் பணத்தை செலவு செய்யும்படி தூண்டினார்கள். அவன் அவர்கள் வார்த்தையைக் கேளாமலிருந்தால் கல்பதனியிலிருப்பதோடு இவ்வித கஷ்டங்களையும் அநுபவிக்கவேண்டியிராது. அவளிடமுள்ள காதலானது அவனது அழிவிற்குக் காரணமாயிற்று. முதலில் அவர்களைப்பற்றி பாலகிருஷ்ணனுக்கு ஒன்றுமே தெரியாது. தனது நண்பனாகிய தண்டபாணியென்பவனால் அவர்கள் முதல்முதல் அறிமுகம் செய்யப்பட்டார்கள்.

அவர்கள் சிறு வயதிலேயே பெற்றோர்களை இழந்துவிட்டதாகவும் மிக்க வறுமையால் கஷ்டப்படுவதாகவும் சொன்னான். அவர்களிடம் மனமிரங்கி பாலகிருஷ்ணன் அவர்களுக்கு பொருளுதவி செய்ததோடு அவர்கள் வீட்டிற்கும் அடிக்கடி போவதுண்டு. அப்படிப் போகும் சமயங்களில் தண்டபாணியை அங்கே காண்பான். அப் பெண்ணினிடமுள்ள இரக்கமானது வரவர முற்றி கடைசியில் காதலாக மாறிவிட்டதோடு அவளைத் தன் குலதெய்வமாகப் பாவிக்கலானான். ஆனால் பத்மாக்ஷிக்கு பாலகிருஷ்ணனிடம் பிரியமிருந்தும் கடைசியாக தண்டபாணியைக் கல்யாணம் செய்துகொள்வதாய்த் தீர்மானித்தாள். கல்யாணம் நடக்குமுன் தண்டபாணி தன் ஏராளமான சொத்தை பத்மாக்ஷிக்குக் கொடுத்துவிட்டுத் திடீரென்று இறந்துவிட்டான். இவைகள் நடந்து சுமார் இரண்டு வருஷங்கள் இருக்கலாம். பத்மாக்ஷி தனக்குக் கிடைத்த

ஆஸ்தியை வைத்துக்கொண்டு தன் ஸஹோதரனோடு வசிக்கலானாள். ஆனால் பாலகிருஷ்ணன் அடிக்கடி போய்வருவான். தன்னைக் கல்யாணம் செய்துகொள்ளும்படி கேட்டதற்கு அவளும் சம்மதித்தாள். இதற்கிடையில் அவளது சகோதரனின் சிநேகிதன் துரைராஜனென்பவன் அப்பணத்தை அபகரிக்கவெண்ணி அவளைக் காதலிக்க ஆரம்பித்தான். ஆனால் அது பலிக்கவில்லை. இதைக் கண்ட துரைராஜன் அவள் ஸஹோதரனைக்கொண்டு அவள் தன்னைக் கல்யாணம் செய்துகொள்ளவேண்டுமென்று வற்புறுத்தினான். ஆகையால் அவள் அவ்விதம் செய்வதாக ஒப்புக்கொள்ளவேண்டியதாயிற்று. அப்படியிருந்தும் பாலகிருஷ்ணனுக்கு அவளிடமிருந்த காதல் கொஞ்சங்கூடக் குறையவில்லை. பாலகிருஷ்ணன் கெடும்படியான சூழ்ச்சிகளை துரைராஜனே செய்து பாலகிருஷ்ணனை இக் கதிக்குக் கொண்டுவந்துவிட்டான்.

துக்ககரமான முகத்தோடு கீழ்நோக்கியவண்ணம் நின்றுகொண்டு மௌனமாயிருக்கும் பத்மாக்ஷியை பாலகிருஷ்ணன் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான். பத்மாக்ஷி பாலகிருஷ்ணனை ஒருவிதமாகப் பார்த்து "நான் உமக்குச் செய்தவைகளைக்கொண்டு இங்கே வரக்கூடாதுதான். ஆனால்—" என்று மேலே சொல்லத் தயங்குவதைக் கண்ட பாலகிருஷ்ணன் "ஆனால் என்ன? பத்மா! உன்னை நான் மறுபடியும் பார்க்க எனக்கு எவ்வளவு ஆனந்தமாயிருக்கிறது தெரியுமா? நான் உன்னை மறந்துவிட்டதாக நினைத்துக்கொண்டாயோ? உன்னிடமுள்ள என் காதல் எத்தன்மையானதென்று உனக்குத் தெரியாது." என்று மிருதுவாகக் கேட்டான்.

இதைக் கேட்ட பத்மாக்ஷி அடக்கமுடியாத ஆனந்தங்கொண்டு அவனது இரு கைகளையும் பிடித்துக்கொண்டு அவனது முகத்தைப் பார்த்து "நீர் என்னை மறக்கவில்லையா? நிச்சயமாய் மறக்கவில்லையா? நான் உமக்குச் செய்த துரோகத்தை மனதில் வைத்துக்கொள்ளாமல் நீர் என்னை மன்னிப்பீர் என்று எண்ணியே இங்கே உம்மைக் காணவந்



தேன். மேலும் இனி என் ஆயுள்காலம்வரையில் உமக்கு உண்மையானவளாகவே இருப்பேன். இனி நாமிருவரும் நேசர்களாயிருக்கவெண்ணியே இங்கே வந்தேன்." என்று தனது தாமரையிதழ்போன்ற கைகளால் பாலகிருஷ்ணன் முகத்தைத் தடவிக்கொண்டு ஒருவிதமான மந்தகாசம் செய்தாள்.

பாலகி:—நான் எப்பொழுதாவது உனது நடத்தையைப் பற்றிக் கோபித்துக்கொண்டதுண்டா? இது என்ன கேள்வி? அப்பொழுதும் நேசன்தான். இப்பொழுதும் நேசனே.

பத்மா:—பாலு! நான் உமக்குச் செய்த துரோகத்தால்தான் நீர் இக் கதிக்கு வந்தீரென்பது எனக்குத் தெரியும். மேலும் அப் பாதகன் துரைராஜன் என்னை அவ்விதம் செய்யும்படி நிர்ப்பந்தித்தான். நான் ஓர் பெண்தானே? புத்தியில்லாமலும் பின் வருவதை யோசிக்காமலும் செய்துவிட்டேன். நானாகச் செய்யவில்லை. ஆகையால் நீர் என்னை மன்னித்ததாகச் சொன்னாலொழிய நான் எழுந்திருக்கமாட்டேன். (என்று சொல்லி அவன்முன் முழந்தாளிட்டு அவனது கால்களைப் பற்றிக்கொண்டாள்.)

பாலகி:—பத்மா! அவ்விதமே உன்னை மன்னித்தேன். எழுந்திரு. ஆனால் நான் இந்த ஸ்திதிக்கு வரும்படியாக நீ செய்ததின் காரணத்தை விபரமாய்ச் சொல்லவேண்டும்.

பத்மா:—அதை உம்மிடம் சொல்லவே வந்திருக்கிறேன். ஆனால் நீர் என்னை மன்னித்ததாக மற்றொரு முறை சொல்லவேண்டும்.

பாலகி:—பத்துத் தடவை வேண்டுமானாலும் சொல்லுகிறேன். எழுந்திரு. (என்று சொல்லி அவளது கையைப் பிடித்துத் தூக்கிவிட்டான்.)

பத்மாக்ஷி எழுந்திருந்து பாலகிருஷ்ணனுடைய கழுத்தை இருகரங்களாலும் சுற்றிக்கொண்டு அவனது பரிதாப

மான நிலைமையைக் கண்டு தேம்பித்தேம்பி அழுதாள். பாலகிருஷ்ணன் அவளைச் சமாதானம் செய்துகொண்டே அவளது கூந்தலைத் தடவிக்கொண்டு ஒரு கையால் அவளை அணைத்துக்கொண்டு துரைராஜனைக் கல்யாணம் செய்துகொள்ளவிருந்த இவள் தன்னிடம் வரவேண்டிய காரணமென்னவென்று எண்ணினான். மறுபடியும் அவளைப் பார்த்து "பத்மா! நீ வந்ததின் காரணத்தைச் சொல்லு." என்று அன்பாகக் கேட்டான்.

பத்மா :—நான் சொல்லவேண்டியது அதிகமில்லை. நான் உம் மீது காதல்கொண்டிருப்பதும், நாம் சமுத்திரக் கரையில் கல்யாணம் செய்துகொள்ளுவதாய் நிச்சயம் செய்துகொண்டதும், அப் பாபி துரைராஜனுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. மேலும் நீர் பணக்காரராயும் செல்வாக்குள்ளவராகவும் இருக்கும்வரையில் தன் எண்ணம் பலிக்காதென்று கண்டுகொண்டு அவனும் அவன் தோழர்களும் கலந்து ஆலோசித்து நான் உம்மை எதைச் செய்யச் சொன்னபோதிலும் நீர் தட்டாமல் செய்வீரென்று தெரிந்துகொண்டு நானும் சிறு பெண்ணாகையால் என்னைக்கொண்டு உம்மை இவ்விதமாகச் சூதாட்டத்திலும் பந்தயங்களிலும் உம்முடைய பணத்தையெல்லாம் செலவழிக்கச் செய்தும் உமக்குக் கடன் முதலானதுகள் வாங்கிக் கொடுத்தும் உம்மை இக் கதிக்குக் கொண்டுவைத்தார்கள். மேலும் இவ்விதமாகச் செலவு செய்தால் அதனால் இன்னும் ஜாஸ்தியாகப் பணம் வந்துசேருமென்றும் எனக்கு ஆசை வார்த்தைகள் சொல்லி என்னைத் தூண்டினார்கள். நான் அவர்கள் கருத்தை அப்பொழுது தெரிந்துகொள்ளவில்லை. அவர்கள் வார்த்தைகளை நம்பிவிட்டேன். நீரும் மேலான ஸ்திதிக்கு வரவேண்டுமென்கிற ஆசையால் அப்படிச் செய்தேன். ஐயோ! அப் பாதகர்களின் எண்ணத்தை அப்பொழுது தெரிந்துகொள்ளாமற்போனேனே. என் சகோதரனும் துரைராஜனையே கல்யாணம் செய்து



கொள்ளவேண்டுமென்று நிர்ப்பந்தித்தான். நான் சிறு பெண்தானே? நான் என்ன செய்வேன்? அவர்கள் வார்த்தையை நம்பியதால் உம்மை இந் நிலைமையிற் காணும்படியாகிவிட்டது.

பாலகி :—நான் சீக்கிரத்தில் அழியவெண்ணி அப்படி நடந்துகொள்ளும்படி நீயா செய்தாய்?

பத்மா :—ஐயோ! இப்படி நடக்குமென்று எனக்குத் தெரியாதே. நான் உம்மைக் கெடுக்கவேண்டுமென்று அப்படிச் செய்யவில்லையே.

பாலகி :—சரி; அது இருக்கட்டும். என்மேல் காதல்கொண்டுள்ள நீ துரைராஜனை ஏன் கல்யாணம் செய்துகொள்ளப்போவதாய்ச் சொன்னாய்?

பத்மா :—பாலு! தம் மேலுள்ள காதல்தான் அதற்குக் காரணம். நான் உம்மையே காதலித்திருந்தேனென்பதும் அப் பாதகனை வெறுத்தேனென்பதும் உமக்கு நன்றாய்த் தெரியும்.

பாலகி :— நீ ஏன் அவனைக் கல்யாணம் செய்துகொள்வதாய்ச் சொன்னாய்?

பத்மா : –நான் அவ்விதம் சொல்லும்படி கட்டாயப்படுத்தப்பட்டேன்.

பாலகி : –கட்டாயப்படுத்தப்பட்டாயா? ஏன்? யாரால்?

பத்மா :—என் சகோதரனைக் காப்பாற்றவே அப்படிச் செய்யும்படியாய்விட்டது.

பாலகி :—அதன் விபரமென்ன?

பத்மா :—என் சகோதரன் சில அயோக்கியர்களுடன் சேர்ந்துகொண்டு தகாத காரியங்களைச் செய்துகொண்டிருந்தான். அவைகள் போலீசுக்குத் தெரிந்தால் அவன் தண்டனை அடைவது நிச்சயம். இதை துரைராஜன் தெரிந்துகொண்டு, என்னை தான் கல்யாணம் செய்து

கொள்ளாவிட்டால் அவனைப் போலீசுக்குக் காட்டிக் கொடுத்துவிடுவதாக பயமுறுத்தினன்.

பாலகி: உன் சகோதரனைக் காப்பாற்றவா அவ்விதம் செய்தாய்?

பத்மா:—ஆம்; இதுதான் உண்மை. என் சகோதரனைக் காப்பாற்றவே அவ்விதம் செய்யும்படியாய்விட்டது. நான் உம்மைப் புறக்கணித்துவிட்டதாகவும் உம்முடைய சொல்லைத் தட்டி நடந்ததாகவும் எண்ணிவிட்டீர். என்னைப்போல் துர்ப்பாக்கியமான பெண்கள் உலகத்திலேயே இருக்கமாட்டார்கள். நான் உம்மை மணம்புரியக்கூடாமலிருந்ததைப்பற்றி நான் அனுபவித்த துக்கம் அப் பகவானுக்குத்தான் தெரியும். மேலும் என் உடம்பைப் பாரும். இதிலிருந்து நான் பட்டிருக்கும் கஷ்டங்கள் நன்றாய் விளங்கும். (என்று துக்கித்தாள்.)

பாலகிருஷ்ணன் அவளை சமாதானம்செய்து "நீ சொல்வது உண்மைதான். நானும் அப்படித்தான் நினைத்தேன். நீ உண்மையை அப்பொழுதே சொல்லியிருந்தால் அந்த அல்பன் துரைராஜனின் சூழ்ச்சியைத் தவிடுபொடியாகச் செய்திருப்பேன். நான் என் கௌரவத்தை இழக்காமலும் கைப்பொருளை இழந்து தவிக்காமலும் உன்னை விவாஹம் செய்துகொண்டு எவ்வளவோ ஆனந்தமாயிருக்கலாம்." என்று சொன்னன்.

பத்மா:—நாங்கள் முதலில் ஏழையாக இருந்தபோதிலும் நற்குடியில் பிறந்த யோக்கியர்களாகவே என் பெற்றோர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் அந்த கௌரவத்தைக் காப்பாற்றும்பொருட்டே என் சகோதரனைக் காப்பாற்றவேண்டியதாயிற்று. நான் வேண்டுமென்று செய்யவில்லை.

பாலகி:—அவன் செய்த குற்றம் அவ்வளவு பலமானதா?

பத்மா:—அதெல்லாம் உமக்குச் சொல்லமுடியாது. மேலும் அதனால் நமக்கு இப்பொழுது ஆகவேண்டியதென்ன?



பாலகி:—நீ சொன்னபடி அவனைக் கலியாணம் செய்துகொண்டாயா?

பத்மா:—அவனைக் கலியாணமா செய்துகொள்வேன்? உம்மை என் மனதிலிருந்து எப்படி மறக்கமுடியும்? அப்படிக் கலியாணம் செய்துகொண்டால் உம்மைத்தவிர மற்றவனைப்பணணிக்கொள்ளமாட்டேன் என்பதையும் கன்னிகையாகவே என் காலத்தைக் கழிப்பேனென்பதையும் உறுதியாக மனதில் வைத்துக்கொண்டேன்.

பாலகி:—ஆ என் கண்மணி! உன் வார்த்தையைக் கேட்டதும் எனக்குப் புது ஜன்மம் ஏற்பட்டுவிட்டது. நீ என்னுடையவள் என்பதை உன் வாயால் மறுமுறை சொல்லு. ஆனல் நான் இப்பொழுது இறந்தவன்போல் இருக்கிறேன். (என்று சொல்லி அவளை அன்போடு அணைத்து அனேகம் தடவை முத்தமிட்டான்.)

பத்மா:—நீர் இவ்விதமிருப்பது எனக்குத் தெரியும். மேலும் நீர் மாயமாய் மறைந்துபோன இரண்டு நாட்களுக்கெல்லாம் பத்திரிகையில் பார்த்துத் தெரிந்துகொண்டேன். சுந்தர விலாசத்திலிருக்கும் பத்மநாபனும் பாலகிருஷ்ணனும் ஒருவர்தான் என்பது எனக்குத் தெரியும்.

பாலகி:—துரைராஜனுக்கு நீ செய்தவாக்கு என்னவாயிற்று?

பத்மா:—நீங்கள் காணமல்போன ஒருவாரத்திற்கெல்லாம் அது ரத்தாகிவிட்டது.

பாலகி:—ஏன்?

பத்மா:-என் சகோதரன் அவனிடமிருந்து தப்பித்துக்கொண்டான். அவனை இனி ஒருவராலும் கெடுக்க முடியாது. அவன் இறந்துவிட்டான்?

பாலகி:—உன் சகோதரனு இறந்துவிட்டான்?

பத்மா:-ஆம். உம்மை நேரில் கண்டு விஷயங்களைச் சொல்லவேண்டுமென்று வெகுநாளாக எத்தேனித்தேன். ஆனல் தைரியம் வரவில்லை.

பாலகி: ஏன்? என்னிடம் என்ன பயம்? அப்பொழுதே என்னிடம் இதைச் சொல்லியிருக்கக்கூடாதா?

பத்மா: என்ன பயமா? நான் உமக்குச் செய்திருக்கும் துரோகத்திற்கு என் முகத்தில் விழிப்பீரா? நான் குற்றம் செய்தவளாகையால் பயந்தேன்.

பாலகி:—நீ அவ்விதம் செய்தது உன் சகோதரனைக் காப்பாற்றவேண்டியே. அதில் தப்பிதமொன்றுமில்லையே.

பத்மா:—நான் செய்த குற்றத்திற்கு அனுபவித்தது போதும்.

பாலகி:—உன் சகோதரன் என்ன வியாதியால் இறந்தான்?

இதற்குப் பதிலொன்றும் சொல்லாமல் பத்மாக்ஷி அழுதுகொண்டேயிருந்தாள். பாலகிருஷ்ணன் அவளைத்தேற்றி "பத்மா! உன்னை நான் எவ்வளவுதடவை நினைத்திருப்பேன் தெரியுமா? நீ என்னை வஞ்சித்ததாக எண்ணியது வாஸ்தவம். ஆனால் நீ என்னை நேசித்ததுபோல் துரைராஜனை நேசிக்கவில்லையென்பதை முன்னமேயே தெரிந்துகொண்டேன். நீ என்னை மணக்க மறுத்ததின் காரணத்தைத் தெரிந்துகொள்ளமுடியவில்லை. நீ அப்படிச் சொன்னதை சாந்தமாய்க் கேட்டேன். ஆனால் என் மனம் உடைந்துவிட்டது. நீ கஷ்டப்பட்டதாய்ச் சொல்லுகிறாய். நான் பட்டுக்கொண்டிருக்கும் கஷ்டம் சொல்லிமுடியாது. என் சுயேச்சையை இழந்து சிறையில் வாசம்செய்வதுபோல் இந்த அறையில் என் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நான்கு அயோக்கியர்களிடம் விலைபட்டு இறந்தவன்மாதிரி வசித்துவருகிறேன். என் ஏராளமான சொத்தை இழந்து கடன்பட்டு தப்புவழியில் நடந்து என் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்து வெளியே சென்ற என்னை வஞ்சித்தழைத்துப்போய் நால்வர்களால் ஒப்பந்தத்தில் சிக்கவைக்கப்பட்டு போலீசில் நான் அகப்பட்டுக்கொள்ளாமலிருக்க என் பெயரையும் மாற்றிக்கொண்டிருக்கிறேன். இவ்விதக் கஷ்டங்களை நான் அனுபவிக்கவில்லையா?" என்றான்.



பத்மா:—இந்த விஷயம் எனக்கு நன்றாய்த் தெரியும். மேலும் உம்மை நான் தினம் கவனித்துக்கொண்டிருக்கிறேன்.

பாலகி:—இது உனக்கு எப்பொழுது தெரியும்?

பத்மா:—நீர் இந்த சுந்தர விலாசத்தில் வசிக்க ஆரம்பித்த மூன்று நாட்களுக்கெல்லாம் தெரியும்.

பாலகி:—இந்நிலைமையிலும் கூடவா நீ என்னைக் காதலிக்கிறாய்?

பத்மா:—ஆம். இப்பொழுதுதான் ஜாஸ்தியாகக் காதலிக்கிறேன். உமக்கு ஆபத்து நேரிட்டிருப்பது தெரிந்தே வந்தேன்.

பாலகி:—எனக்கு என்ன ஆபத்து?

பத்மா:—உம்மை போலீசுக்குக் காட்டிக்கொடுத்து தண்டனையடையச் செய்து அவமானப்படுத்துவதுதான். நான் உமக்கு ஒத்தாசை செய்யவே வந்திருக்கிறேன். காரணம் தெரியுமா?

பாலகி:—நான் உன்னை நேசித்திருப்பதுபோல் நீயும் என்னை நேசித்திருப்பதுதான் காரணம். (என்று சொல்லி அவளை ஆலிங்கனம் செய்துகொண்டு அடிக்கடி முத்தமிட்டான்.)

இவ்விதம் அவ்விருவரும் சந்தோஷமாக இருக்கும் சமயத்தில் திடீரென்று கதவு திறக்கப்பட்டு அமிர்தலிங்கம் உள்ளே வந்தான். வந்தவன் இன்னானென்பதை அடையாளம் கண்டுகொண்ட பத்மாக்ஷி, ஆச்சரியத்தினாலும் பயத்தினாலும் சற்றுப் பின்னடைந்து, அவனை உற்றுப்பார்த்து "ஆ! தாங்களா?" என்று சொல்லி மேலே சொல்ல நாவெழாமல் தன் நினைவுதப்பி பாலகிருஷ்ணன்மீது சாய்ந்தாள்.

## அத்தியாயம் 28.

இப்படி அவள் மூர்ச்சையடைந்ததைக் கண்ட அமிர்தலிங்கம் அவளை ஓர் சோபாவில் படுக்கவைத்து கொஞ்சம

தண்ணீரை அவளது முகத்தில் தெளித்து விசிறியால் விசிறி அவளுக்கு பிரக்ஞை வரும்படியாய் உபசாரம் செய்தான். பத்மாக்ஷி கண்ணைத் திறந்தாள். பாலகிருஷ்ணன் அவளைப் பார்த்து "என்ன இது? இப்படி நடக்கக் காரணமென்ன?" என்று பத்மாக்ஷியைக் கேட்டான். பத்மாக்ஷி மிரள விழித்து, "நான் எங்கு இருக்கிறேன்?" என்று சொல்லி நான்குபுறமும் பார்க்க "ஹா! தாங்களா? பத்மநாபரா?" என்று அமிர்தலிங்கத்தைப் பார்த்து மரியாதையாகக் கேட்டாள். இவ் வார்த்தையைக் கேட்ட பாலகிருஷ்ணன் பிரமித்துப்போய் ஆச்சரியத்தோடு 'ஐயா! தாங்களா பத்மநாபன்? நான் யாரைப்போல் இப்பொழுது வசித்து வருகிறேனோ அந்த பத்மநாபனா தாங்கள்?" என்று வாய்குழறக் கேட்டான்.

பத்மநா:—ஆம்; பாலகிருஷ்ணா! பயப்படாதே. அது நான் என் பெயர்.

பாலகி:—நான் தங்களைப்போலிருப்பதைப்பற்றி என்னை மன்னிக்கவேண்டும்.

பத்மநா:—அப்படியே மன்னித்தேன். நீயாகவா அப்படி இருந்தாய்? அவ்வயோக்கியன் அரங்கநாதனல்லவோ இப்படிச் செய்தான். உன்மேல் என்ன குற்றம்?

பாலகி:—ஆனால் நான் பவழக்காரத்தெருவில் அரங்கநாதன் வீட்டில் கண்டது யாருடைய பிரேதம்?

பத்மா:—அது என்னுடைய சகோதரனின் பிரேதம். அவன் வேஷம் போட்டிருந்ததினால் அவனை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. அவன் சிநேகிதர்களான அந்நான்கு அயோக்கியர்களுடைய துரோகத்தை சமீபகாலத்தில் நான் தெரிந்துகொண்டேன். அவனால் தங்களுக்கு ஏதாவது கெடுதல் ஏற்படக்கூடுமென்று எண்ணி அவனை ஒழித்துவிடவும் நீரும் இறந்துவிட்டதாக திருவேங்கடம் எண்ணிக்கொள்ளவும் வேண்டுமெனக் கருதி அவனுக்கும் உம்மைப்போல் வேஷம்போட்டு அவன் குடிக்கும் சாராயத்தில் விஷ



த்தைக் கலந்து வைத்துவிட்டார்கள். அவன் திருவேங்கடத்தைப் போய்ப் பார்த்துவர ஏற்பாடு செய்யப்பட்டது. அவன் அங்கு புறப்படுமுன் சாராயத்தைக் குடிக்க உடனே மாண்டான். அவர்களுடைய இந்த ரகசியமான சூழ்ச்சியை நான் கடைசியாகக் கண்டுகொண்டேன்.

பாலகி:—அவர்கள் உடனே அவ்வீட்டைவிட்டு ஓடிவிட்டார்களா?

பத்மா:—ஆம்; இது விஷயத்தில் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டுவிட்டதாக பயந்து ஓடிவிட்டார்கள். எனக்கு இது விஷயமொன்றும் தெரியாதெனக் கண்டு பிறகு வெளிவந்தார்கள். வந்ததும் பிணத்தை ரகசியமாய் அடக்கம் செய்துவிட்டார்கள். பிறகுதான் உம்மையும் காமாக்ஷியையும் அழைத்துவந்து அரங்கநாதன் காட்டி வீட்டைப் பரிசோதிக்கும்படி சொன்னது.

பாலகி:—இறந்தவன் உன் சகோதரனென்று நான் சொப்பனத்திலும் நினைக்கவில்லை.

பத்மா:—அவன் கொலைசெய்யப்படுமுன் உம்மைப்போல் வேஷம்போட்டுவித்த அவர்கள் சூழ்ந்த முன்யோசனையை இப்பொழுது தெரிந்துகொண்டீரா?

பாலகி:—இப்பொழுதுதான் நன்றாய்த் தெரிகிறது. உன் சகோதரன் அவர்கள் கூட்டத்தில் சேர்ந்தவனோ?

பத்மா:—போதாதகாலமாய் உம்மைப்போல் அவனும் அவர்கள் கையில் சிக்கிக்கொண்டான்.

பத்மநா:—இறந்தவன் உன் சகோதரனென்று இப்பொழுதுதான் தெரிந்துகொண்டேன்.

பாலகி:—உம்மைப்போல் நடிக்கும்படி என்னை ஏற்படுத்திய காரணம் என்ன?

பத்மநா:—அதை நான் இப்பொழுது ஒன்றும் அறியவில்லை. ஆனால் அது மிக்க அபாயகரமான சூழ்ச்சியென்பது மட்டும் தெரிகிறது. அதையும் நாம் சீக்கிரத்தில்

தெரிந்துகொள்ளலாம். நான் இறந்துவிட்டதாகவே அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். நான் உயிருடன் இருப்பதாகவே பிறர் நம்பும்படி செய்ய அப்படிச் செய்திருக்கலாம். அவர்கள் தங்கள் காரியம் கைகூடியதாகவே நிச்சயித்து உன்னை ஒழித்துவிடத் தீர்மானித்துவிட்டார்கள்.

பத்மா:—அவர்களால் இனி அவ்விதம் செய்யமுடியாது. பாலுவைக் கொல்ல ஏதாவது சூழ்ச்சி செய்தாலும், அல்லது போலீசுக்குத் தெரியப்படுத்தப் பிரயத்தனப்பட்டாலும், அடுத்த நிமிஷம் என் சகோதரனைக் கொன்ற கொலைபாதகர்கள் இவர்கள்தானென்று பகிரங்கப்படுத்திவிடுவேன்.

பத்மநா: இது அவர்களுக்குத் தெரியுமோ? நீ அவர்களை ஏதாவது பயமுறுத்தினையா?

பத்மா:—அப்படி நான் ஒன்றும் செய்யவில்லை. அவர்கள் எப்படியோ எனக்கு அவ் விஷயம் தெரியுமென்று கண்டுகொண்டிருக்கிறார்கள்.

பாலகி:—உன்னிடம் அவர்கள் பயப்படுகிறவரையில் அவர்களால் எனக்கு யாதொரு கெடுதியும் செய்யமுடியாது. மேலும் நீயும் என் காதலியென்பதும் அவர்களுக்குத் தெரியும். பத்மநாபரும் நமக்கு ஒத்தாசை செய்ய வந்திருக்கிறார்.

பத்மநா:—ஆம்; பாலகிருஷ்ணா! உனக்கு ஒத்தாசை செய்யவே வந்திருக்கிறேன். ஆனால் முன்மாதிரி காமாக்ஷி மறுமுறை ஆபத்தில் சிக்கிக்கொள்ளாமல் முதலில் பார்த்துக்கொள்ளவேண்டும்.

பாலகி:—காமாக்ஷியை ஒழிக்க அவர்கள் ஏன் அவ்வளவு அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும்?

பத்மநா:—அவசரப்படாதே. எல்லாவற்றையும் சொல்லப் போகிறேன். பேசுவதற்கு இது சமயமல்ல. காரியத்தை முதலில் பார்க்கவேண்டும். காமாக்ஷி ஒரு



தடவை தப்பித்துக்கொண்டாள். அவள் இருப்பிடம் தியாகராஜனுக்குத் தெரிந்திருக்கும்வரையில் அவன் அவளைத் தொலைத்துவிட கண்டிப்பாய் ஏற்பாடு செய்வான். அவளைக் காப்பாற்றவேண்டியதைப்பற்றி முதலில் நாம் கவனிக்கவேண்டும். நானும் நல்ல காலமாய் சமயத்தில் வந்து உங்களுடன் கலந்துகொண்டேன்.

பாலகி: —எல்லாம் ஈசன செயல்.

பத்மநா:—நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தபோதிலும் அவளுக்கு ஏதாவது ஆபத்து நேரிடாமற்போகாது. அவ்வயோக்கியர்களின் நடத்தையை நான் தெரிந்துகொண்டிருப்பதுபோல் உங்களுக்குத் தெரியாது.

பாலகி:—அவர்கள் அயோக்கியர்களென்றும் ஒன்றுக்கும் அஞ்சாதவர்களென்றும் கொலைபாதகர்களென்றும் அவர்களுடன் பழகியதில் தெரிந்துகொண்டேன்.

பத்மநா:—நாம் அதிக ரகசியமாயும் ஜாக்கிரதையாயும் நடந்துகொண்டால் நாம் ஜயமடைவது நிச்சயம். மேலும் அவர்கள் கோழைகளல்ல. ஒன்று ஜயமடைவது அல்லது இறப்பது என்பதுதான் அவர்கள் தீர்மானம். ஆகையால் அவர்கள் ஒருகை பார்த்தே தீருவார்கள்.

பாலகி:—நாம் இதைப் போலீசுக்குத் தெரியப்படுத்துவது நல்லதல்லவா?

பத்மநா:—நாம் அவசரப்பட்டு ஒரு காரியத்தையும் தடபுடலாய் செய்துவிடக்கூடாது. விஷயம் முழுமையும் தெரிந்துகொண்டுதான் அப்படிச் செய்யவேண்டும். அப்பொழுதுதான் நமக்கு ஜயம் கிடைக்கும். முதலில் நான் காமாக்ஷியைப் பார்த்துச் சில விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். அந் நால்வரும் அகப்பட்டுக்கொள்ளும்படியான சில ரகசியங்கள் அவளுக்குத் தெரியும்.

பாலகி:—அப்படியானால் நான் வில்லிவாக்கம் சென்று காமாக்ஷியைப் பார்க்கிறேன். திருவேங்கடத்தின்

நிலைமையையும் தெரிந்துகொள்ளவேண்டும். நேற்றையதினம் மிகவும் அபாயகரமான நிலைமையில் இருந்ததாக டாக்டர் சொன்னார். இன்றைய சமாசாரம் தெரியவில்லை.

பத்மா:— நீ திருவேங்கடத்தைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். அதை நான் பார்த்துக்கொள்ளுகிறேன். நீ வில்லிவாக்கம் போனவுடன் தியாகராஜன் அவ்விடம் வட்டமிட்டுக்கொண்டிருக்கிறான். அதனால் எனக்குச் சந்தேகமேற்படுகிறது. அவன் ஏதோ கெடுதலெண்ணத்துடன் அங்கே போய்க்கொண்டு வருகிறான். அவர்கள் ஏதேனும் காரியத்தை முடித்துவிடுவார்கள். ஆகையால் அவர்கள் அப்படிச் செய்யாமல் நாம் ஜாக்கிரதையாயிருந்து தடுக்கவேண்டும். தவிர நேற்றையதினம் திருவேங்கடத்தின் வியாதியைப் பற்றி டாக்டரைக் கேட்டேன். அவர் சொன்னதிலிருந்து அவ்வயோக்கியர்கள் எனக்குக் கொடுத்த விஷத்தையே அவனுக்குக் கொடுத்திருக்கவேண்டுமென்று தீர்மானித்தேன். அவ்விஷத்தின் குணத்தை டாக்டர்களால் கண்டுபிடிக்கமுடியாது. அதற்கு முறி என்னிடம் இருக்கிறது. அதை அப்பொழுதே அவனுக்குக் கொடுத்தேன். இன்று காலையில் டாக்டரை விசாரித்ததில் வியாதியானது திடீரென்று தெறித்துப்போய்க் குணமடைந்துகொண்டு வருவதாகவும் பலஹீனம் மாத்திரந்தான் இருக்கிறதென்றும் இன்னும் நான்கு தினங்களில் பூர்ணமாய்க் குணமடைந்து தலைக்குத் தண்ணீர் வார்க்கலாமென்றும் சொன்னார். ஆகையால் அவனைப் பற்றிக் கவலை வேண்டாம். நான் சாயங்காலம் ஆறு மணிக்குக் காமாக்ஷியைப் பார்க்கவேண்டுமென்று சொல்லி அவளை இங்கு அழைத்துவா. அந்த சமயம் உனக்கு வேலையிராதென்று நினைக்கிறேன்.

பாலகி:— இதைக்காட்டிலும் எனக்கு என்ன வேறு வேலை?

பத்மா:— சரி; நான் போய்வருகிறேன். நீ வில்லிவாக்கத்தில் அவ்வயோக்கியன் கண்ணில் படாமலிருக்க



வேண்டும். ஏதாவது சிறு தப்பிதம் நடந்துவிட்டால் நம் முயற்சிகளெல்லாம் வீணாகிவிடும். பத்திரம். (என்று சொல்லி வெளியே சென்றான்.)

அவன் சென்றதும் பத்மாக்ஷியும் விடைபெற்றுக்கொண்டு தானும் சாயங்காலம் ஆறு மணிக்கு வருவதாய்ச் சொல்லிச் சென்றாள்.

சாயங்காலம் நான்கு மணி சுமாருக்கு பாலகிருஷ்ணன் வில்லிவாக்கத்தில் காமாக்ஷி வசிக்கும் தெருவின் கோடியில் நின்றுகொண்டு தெருவைக் கவனிக்க ஒருவருமில்லையெனத் தெரிந்துகொண்டு ஜாக்கிரதையாக அத்தெருவின் வழியாக இரண்டு மூன்று தரம் சென்று பார்க்க ஒருவரும் ஒளிந்துகொண்டிருக்கவில்லையெனக் கண்டுகொண்டு நேராக மீனாக்ஷியம்மாள் வீட்டிற்குட் சென்றான். அவனைக் கண்ட மீனாக்ஷியம்மாள் "என் பாலகிருஷ்ணா! நீ காமாக்ஷியைப் பார்க்கவில்லையோ? உன்னைக் காணவேண்டியே பட்டணம் சென்றாளே." என்றாள்.

பாலகி:— என்ன? என்னைப் பார்க்கவா பட்டணம் சென்றிருக்கிறாள்? (என்று ஆச்சரியத்தோடும் பயத்தோடும் கேட்டான்.)

மீனாக்ஷி:— என்ன? கந்தவிலாஸத்தில் பன்னிரண்டு மணிக்கு உம்மைப் பார்க்கவேண்டுமென்றும் காரியம் மிகவும் முக்கியமானதென்றும் நீ அவளுக்குத் தந்தி கொடுத்தது ஞாபகமில்லையா? அந்த தந்தியைப் பார்த்து விஷயம் திருவேங்கடத்தைப்பற்றிய ஏதாவது பயங்கரமான விஷயமாக இருக்கலாமென்று பயந்தாள்; அவளை அந்த சமயம் பார்க்க சகிக்கவில்லை.

இதைக் கேட்ட பாலகிருஷ்ணன் சிலைபோல் அசைவற்று நின்றுவிட்டான். மனதில் என்னென்னவோ எல்லாம் எண்ணினான். அவள் கதி யாதாயிற்றோவென்று மனம் கலங்கினான். சற்று பொறுத்து "நான் யாதொரு தந்தியும் கொடுக்கவில்லையே. அதைப்பற்றி யாதொன்றும் தெரியாதே." என்றான்.

மீனாக்ஷி:—நீங்கள் தந்தி அனுப்பவில்லையா? பன்னிரண்டு மணிக்கு போஜனம்கூட செய்யாமல் ஆபீஸுக்குச் சென்றீர்களே? (என்று பதைபதைப்போடு கேட்டாள்.)

பாலகி:—நான் இன்று காலைமுதல் இந்த வரை புறப்படும் வரையில் என் ஹோட்டலில்தான் இருந்தேன். நான் எங்கும் செல்லாமல் நேராக இங்குதான் வருகிறேன். அவள் என்னிடம் வரவில்லையே.

மீனாக்ஷி:—அப்படியானால் அவள் எங்கு சென்றிருப்பாள்? இது யாருடைய வேலையோ தெரியவில்லையே.

பாலகி:—மீனாக்ஷியம்மா! நான் அவளுக்குத் தந்தியனுப்பவில்லை. அவளை இவ் வீட்டைவிட்டு வெளிப்படுத்த யாரோ விரோதி செய்த வேலையாயிருக்கலாம்.

மீனாக்ஷி:—முன்பு இவளைக் கொலைசெய்ய எத்தனித்த அப்பாதகர்களின் வேலையாயிருக்கலாமோ? போலீஸுக்கு இதை உடனே தெரியப்படுத்தவேண்டும்.

பாலகி:—அப்படியே செய்கிறேன். ஆனால் அவளுடைய விரோதிகள் யாரையாவது தெருவில் நடமாடிக்கொண்டிருப்பதைக் கண்டதாக உம்மிடம் எப்பொழுதாவது சொன்னாளா?

மீனாக்ஷி:—எனக்குத் தெரிந்தவரையில் அப்படி நடந்ததாக என்னிடம் அவள் சொல்லவில்லை. தந்தியைப்பார்த்ததும் திருவேங்கடம் இறந்துவிட்டதாகவே தான் நினைப்பதாகச் சொல்லிக் கதறினாள்.

இதைக் கேட்டதும் பாலகிருஷ்ணனுக்கு இன்னது செய்வதென்று புலப்படவில்லை. பத்மநாபன் பயந்தபடியே காரியம் முடிந்துவிட்டது. உண்மையைப்போல் ஓர் பொய்யைக் கற்பித்து அவளைக் கொண்டுபோய்விட்டார்களோ அல்லது அவள் திருவேங்கடத்தின் விடுதிக்குச் சென்று அவனது நிலைமையைத் தெரிந்துகொண்டு பிறகு சுந்தரவிலாஸம் சென்று அங்கு தனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாளோவென்று எண்ணினான். மணியும் ஐந்து



அடிக்க உடனே சுந்தரவிலாஸம் சென்று பார்க்கத் தீர்மானித்து, ஒருக்கால் காமாக்ஷி திரும்பி வில்லிவாக்கம் வருவாளாகில் எக் காரணத்தைக்கொண்டும் வெளியே போகாமலிருக்கும்படி அவளுக்குத் தெரிவிக்கும்படி மீனாக்ஷியம்மாளிடம் சொல்லி விடைபெற்றுக்கொண்டு தன்னிருப்பிடம் வந்துசேர்ந்தான். உடனே சீனுவால தன்னை ஒருவரும் காண வரவில்லையென்பதைத் தெரிந்துகொண்டு பத்மநாபன் வரவை எதிர்பார்த்துக்கொண்டு இருந்தான். மணியும் ஆறு அடிக்கக் கதவும் தட்டப்பட்டு பத்மநாபன் உள்ளே வந்தான்.

---

## அத்தியாயம் 29.

---

பத்மநாபனைக் கண்டதும் பாலகிருஷ்ணன் தான் வில்லிவாக்கம் போய்வந்ததையும் அவ்விடம் காமாக்ஷி பொய்த் தந்தியை நம்பி பட்டணம் வந்திருப்பதாக மீனாக்ஷியம்மாள் சொன்னதையும் சொன்னான். இதைக் கேட்ட பத்மநாபன் மரம்போல் அசைவற்று நின்றுவிட்டான். சற்றுப்பொறுத்து "பாலு! இதில் ஏதோ மோசம் நடந்திருக்கிறது. மேலும் அவர்கள் காரியம் முடியவேண்டி அவள் இறக்கவேண்டுமென்பது அவர்கள் கருத்து. அதுவும் அவளுக்கு முன் ஒருதடவை அவர்கள் செய்ததிலிருந்து நன்றாய் விளங்குகிறது." என்றான்.

பாலகி:—அவளை ஏன் கொல்லவேண்டும்?

பத்மநாபன் "அதன் காரணத்தை பின்பு தெரிந்துகொள்வாய்." என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது பத்மாக்ஷியும் உள்ளே வந்தாள். அவளிடம் நடந்த சமாசாரத்தைத் தெரியப்படுத்தினார்கள். பத்மாக்ஷியும் திகிலடைந்து பத்மநாபனைப் பார்த்து "நாம் இப்பொழுது என்ன செய்யலாம்? அவள் இவ்விடம் வந்துகொண்டிருக்கும்போது அவர்களில் ஒருவன் அவளை [illegible] ருந்து சந்தித்து அவளைக் [illegible] பேசியிருக்கலாம். [illegible] றாள்

198794

பத்மநா:—அப்படித்தானிருக்கவேண்டும். அப்படியிருக்கும் பக்ஷத்தில் அவன் பழக்காத தெருவில அரங்கநாதன் வீட்டில்தான் இருக்கவேண்டும்.

பாலகி:—அப்படியானால் நாம் அவ்விடம் சென்று அவ்வயோக்கியர்களைக் கண்டிப்பாய் எதிர்த்து காமாக்ஷியைக் காக்கவேண்டும்.

பத்மநா:—அவர்கள் வீட்டில் இருக்கவேண்டுமே. நாம் வெளிச்சத்தில் அங்கு சென்றால் ஒருக்கால் அவர்கள் நாம் வருவதைக் கண்டுகொண்டுவிடுவார்கள். நாம் உள்ளே போவதாயிருந்தால் ஏதாவது குழப்பமேற்படலாம். அப்பொழுது அவர்கள் தப்பிக்கொள்ளவும் நேரிடும். ஆகையால் அவர்கள் எதிர்பாராதபடி திடீரென்று நாம் அங்கே போகவேண்டும்.

பாலகி:—அப்படியானால் இரவு ஒன்பது மணிக்கு அவ்விடம் போகலாம். அதற்குள் காமாக்ஷிக்கு ஆபத்து நேரிடாமலிருக்கவேண்டுமே.

பத்மநா:—அவர்களுக்குச் சந்தேகம் ஏற்படாதவரையில் அவளுக்கு ஒன்றும் ஏற்படாது. அப்படியே ஒன்பது மணிக்குப் போகலாம். உன்னிடம் கைத்துப்பாக்கி இருக்கிறதா?

உடனே பாலகிருஷ்ணன் மேஜையைத் திறந்து இங்கிலாந்தில் செய்யப்பட்ட தனது இரட்டைக் குழாய் கைத்துப்பாக்கியை எடுத்து பத்மநாபனிடம் கொடுக்க, அவன் அதை நன்றாய்ப் பரிசோதித்துப் பார்த்து "நல்ல துப்பாக்கி. இதில் குண்டுகளை போட்டு சுடத் தயாராய் வைத்துக்கொள். இது கட்டாயமாய் உபயோகமுள்ளதாகவிருக்கும். நானும் எனது துப்பாக்கியை இதோ வைத்திருக்கிறேன்." என்று சொல்லி தனது சட்டைப் பையிலிருந்து ஒரு துப்பாக்கியை எடுத்துக் காட்டினான்.

பத்மா:—அப்படியானால் அங்கே அபாயமேற்படும்போல் தோன்றுகிறதே.



பத்மநா:—பயப்படவேண்டாம். நானும் பாலகிருஷ்ணனும் அவ்வயோக்கியர்கள் ஏதாவது கெடுதல் செய்ய உத்தேசிப்பார்களாகில் உடனே பைத்தியம் பிடித்த நாய்களைச் சுடுவதுபோல் சுட்டுத்தள்ளிவிடுவோம்.

பிறகு அந் நால்வரையும் எப்படிப் பிடிக்கலாமென்று யோஜனையோடு தான் எட்டு மணிக்கு வருவதாய்ச் சொல்லி வெளியே சென்றான், பத்மநாபன்.

தனியாக விடப்பட்ட காதலரிருவரும் நடந்த விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்து சிறுவால் கொண்டுவரப்பட்ட ஆகாரத்தை உண்டு பத்மநாபன் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது பாலகிருஷ்ணன் பத்மாக்ஷியைப் பார்த்து அவளுக்கு அரங்கநாதனை எப்படித் தெரியுமென்று கேட்க அவள் தனது சகோதரனாலும் துரைராஜனாலும் அவனுக்கு அறிமுகம் செய்யப்பட்டதாகவும் முதலில் அவனை ஓர் பெரிய வியாபாரியென்று எண்ணியிருந்ததாகவும் ஆனால் பிறகு அவன் ஒரு பெரிய கொள்ளைக்காரனென்றும் சுத்த அயோக்கியனென்றும் கண்டுகொண்டதாகவும் சொன்னாள்.

பாலகி:—நான் உன்னைவிட்டுப் பிரிந்த பிறகு நீ எங்கே வசித்துவருகிறாய்?

பத்மா:—அவ்வயோக்கியன் துரைராஜனை நான் விலக்கியதும் தங்கசாலைத் தெருவில் என் தோழியோடு வசித்துவருகிறேன்.

இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் மணியும் எட்டடிக்க அதே சமயம் பத்மநாபனும் உள்ளே வந்து அவர்களைப் புறப்படும்படி சொன்னான்.

உடனே அம் மூவரும் ஹோட்டலைவிட்டு வெளியே வந்து பத்மநாபனால் தயாராய் வைத்திருந்த வண்டியிலேறி தம்புசெட்டித் தெருவில் கிருஷ்ணன் கோவிலுக்கெதிரில் வந்து இறங்கினார்கள். அப்படி வண்டியில் வரும்பொழுதே முதலில் பாலகிருஷ்ணன் அவ் வீட்டிற்குச் சென்று அரங்-

நாதனை ஓர் முக்கிய விஷயமாய்ப் பார்க்கவேண்டுமென்று பாசாங்கு செய்து கதவைத் திறக்கும்படி செய்து கதவு சாத்தப்படாதபடி வாசற்படியின் உள்ளே நிற்கவேண்டுமென்றும் அந்த சமயம் பத்மநாபனும் பத்மாக்ஷியும் திடீரென்று உள்ளே நுழைந்துவிடுவதென்றும் ஏற்பாடுசெய்து கொண்டார்கள். அவ்விதம் செய்வது மிகவும் அபாயகரமென்று பாலகிருஷ்ணன் எண்ணியபோதிலும் காமாக்ஷியைக் காப்பாற்ற உத்தேசித்து அவன் எதையும் லக்ஷியம் செய்யாமல் முன்னால் நடக்க அவ்விருவரும் மறைவாய்ப் பின் தொடர்ந்தார்கள். பாலகிருஷ்ணன் அவ் வீட்டை யடைந்ததும் அவ்விருவரும் ஒருபக்கமாக மறைவில் நின்று கொண்டார்கள். பாலகிருஷ்ணன் கதவைத் தட்ட, சோமநாதன் கதவைத் திறந்து பாலகிருஷ்ணனைப் பார்த்து திடுக்கிட்டு "எங்கே வந்தாய்? எங்கள் இருப்பிடத்திற்கு நீ வரக்கூடாதென்று அரங்கநாதன் கண்டிப்பான உத்திரவு செய்திருக்கவில்லையா?" என்று கேட்டான்.

பாலகி:--ஆம்; உண்மைதான். ஆனால் அரங்கநாதனோடு மிகவும் முக்கியமான சமாசாரமொன்றை இப்பொழுதே சொல்லவேண்டும். அவரை உடனே பார்க்க வேண்டும். அவர் உள்ளே இருக்கிறாரா?

சோம:—ஆகா! உள்ளே இருக்கிறார். நல்லவேளையாய் இப்பொழுது வந்தாய். இன்னம் ஒருமணிக்கெல்லாம் அவர் இவ்வூரைவிட்டுப் போவதாயிருக்கிறார்.

பாலகி:—அவரைக் காண அவர் சிநேகிதர் இருவரை அழைத்துவந்திருக்கிறேன். (என்று சொல்லிக்கொண்டே வாசற்படியைத் தாண்டி கதவைச் சாத்தாதபடி நின்றுகொண்டான்.)

சோமநாதன் தான் கொண்டுவந்திருந்த லாந்தல் வெளிச்சத்தால் பத்மநாபனையும் பத்மாக்ஷியையும் கண்டு பிரமித்துவிட்டான். அந்த சமயத்தைக் கைவிடாமல் அவன் திகைத்துநிற்கையில் அவ்விருவரும் தட்டென்று உள்ளே சென்று பாலகிருஷ்ணனுடன் மெத்தைக்குப் போய் அரங்க



நாதன் இருக்கும் அறைக்கு வந்துசேர்ந்தார்கள். அந்த சமயம் தியாகராஜனும் அரங்கநாதனும் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். திடீரென்று பத்மநாபன் உள்ளேவர அவனைக் கண்டதும் ஓர் ஆவேசத்தைக் கண்டதுபோல் இருவரும் திடுக்கிட்டு எழுந்திருந்து அவனைப் பார்த்தபடியே "ஹா! நீயா?" என்று ஒரேசமயத்தில் வாய்விட்டுக் கூவினார்கள்.

பத்மநா:—ஆம்; நான்தான் பத்மநாபன் வந்திருக்கிறேன். என்னைப் போல வசிக்கும்படி உன்னால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பாலகிருஷ்ணனும் வந்திருக்கிறான். மேலும் இவ் வீட்டில் உன்னால் கொலைசெய்யப்பட்டவனுடைய சகோதரி பத்மாக்ஷியும் வந்திருக்கிறாள். (என்று அரங்கநாதனைப் பார்த்துச் சொல்லிவிட்டு தியாகராஜனைப் பார்த்து) கல்யாணசுந்தரம் பிரபுவிற்கும் அவர் ஏக புத்திரி காமாக்ஷிப் பெருமாட்டிக்கும் நீ செய்திருக்கும் சூழ்ச்சியை அடியோடு ஒழிப்பதற்கு வந்திருக்கிறேன். (என்று சொன்னான்.)

தியாக:—நீ சொல்லுவது மிகவும் வேடிக்கையாய் இருக்கிறது.

பத்மநா:—உனக்கு இது வேடிக்கையாகத்தானிருக்கும். விஷயம் வெளியானால் வெளி ஜனங்களுக்கு இன்னும் அதிக வேடிக்கையாகத்தானிருக்கும்.

அந்த சமயம் சோமநாதனும் உள்ளேவர பத்மநாபன் திடீரென்று கதவை மூடி உள்பக்கம் தாளிட்டுக்கொண்டு கதவின்மீது சாய்ந்துகொண்டான்.

அரங்கநாதன் இதைக் கண்டு "இதை யார் வீடென்று எண்ணிக்கொண்டாய்? கதவைத் திற." என்று அதிக கோபத்தோடு கதவை நோக்கி ஓடிவந்தான். ஆனால் அடுத்த நிமிஷம் பத்மநாபனும் பாலகிருஷ்ணனும் கைகளில் துப்பாக்கிகளை வைத்துக்கொண்டிருப்பதைக் கண்டு பின்னடைந்தான். இவ்விதமாய் அம் மூன்று சிலந்திகளும் தங்கள் வலையிலேயே சிக்கிக்கொண்டன.

பத்மநா :—அரங்கநாதா! நான் சொல்லுவதைக் கேள். காரியங்களை மேலே நடத்துவதற்கு முன்னால் எனக்குச் சமீபகாலத்தில கல்கத்தா போலீஸ் கமிஷனரால் தெரிவிக்கப்பட்டிருக்கும் சில விஷயங்களை இப் பாலகிருஷ்ணனிடம் சொல்லப்போகிறேன். நீ மிகவும் பெரிய மனிதனைப்போல் நடித்து வெகு பேர்களை மோசம்செய்திருப்பதாய் நீயே ஒத்துக்கொள்வாய். மேலும் நீ ஹோடல் திருடனென்றும் சூதாட்டத்தில் சீட்டு மாற்றுகிறவனென்றும் கொள்ளைக்காரனென்றும் பெரிய பிரபுவைப்போல் நடிப்பவனென்றும் வட இந்தியா முழுவதும் பிரசித்தமாயிருப்பதும் உனக்குத் தெரியும். மேலும் உன்னைக் கைதுசெய்ய உன் அடையாளத்தைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு அம் மாகாணங்களிலுள்ள ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் உனது புகைப்படம் மாட்டியிருப்பதும் உனக்குத் தெரியும்.

அரங்க :—நீ சொல்லும் சகாத வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு இங்கிருக்க எனக்கு இஷ்டமில்லை. நான் வெளியே போகவேண்டும். கதவைத் திற. (என்று அதிகாரத்தோடு சொன்னான்.)

பத்மநா :—அரங்கநாதா! அவசரப்படாதே. நான் சொல்லுவது முழுதும் நீ கேட்ட பிறகே வெளியே போகவேண்டும். நீ முதலில் காசியில் பிச்சையப்பன் என்னும் பெயருடன் ஒரு ஜவுளிக் கடையில் வேலைக்கு அமர்ந்து அக் கடையிலிருந்து உயர்ந்த பட்டாடைகளைத் திருடிக்கொண்டதோடு ஒரு வைர வியாபாரியிடமிருந்து அதிக விலையுள்ள நகைகளையும் தட்டிக்கொண்டு கல்கத்தாவிற்கு வந்து அவைகளைக்கொண்டு ஓர் பிரபுவைப்போல் வசித்துவந்தாய். போலீஸ்காரர்கள் எப்படியோ உன்னைக் கண்டுபிடித்துவிட்டார்கள். அக் குற்றத்திற்காக நான்கு வருஷம் சிறையில் இருந்தாய். சிறையிலிருந்து விடப்பட்டதும் இப்பட்டணம் வந்து



சூதாட்டத்தில் ஏராளமான பணம் சம்பாதித்துக்கொண்டு கொழும்புக்குச் சென்று ஓர் சிங்களப் பிரபுவினிடம் தந்திரமாய் சிநேகம்செய்துகொண்டு அவனது இரும்புப் பெட்டியிலுள்ள சுமார் ரூபாய் இருபது ஆயிரத்தைத் தட்டிக்கொண்டு சிங்கப்பூருக்குப் பயணமாய்க் கப்பலேறும் சமயம் நீ கைதுசெய்யப்பட்டு இரண்டு வருஷம் தண்டனை அடைந்தாய். பிறகு நீ பம்பாய்க்குச் சென்று தென்னரங்கப் பிரபுவென்று பெயர் வைத்துக்கொண்டு வசிக்கலானாய். அவ்விடம்தான் இத் தியாகராஜன் உனக்கு நண்பனாகியது. இத் தியாகராஜன் மதுரையிலுள்ள புஸ்தக சாலையிலிருந்து மிகவும் அருமையான கைப் பிரதிகளை திருடி அந்த பம்பாயில் விற்றுக்கொண்டிருந்தான். அவ்விடம் இன்னும் இரண்டு காலாடிகளைச் சேர்த்துக்கொண்டு ரங்கூன் போய்ச் சேர்ந்தாய். அவ்விடத்தில் ஓர் பணக்கார விதந்துவின் பொருளை அடித்துக்கொண்டு சிங்கப்பூர் போய்ச் சேர்ந்தாய். அதுவரையில் உன்னுடன் தொடர்ந்துவந்த உனது சம்சாரத்தை அனாதையாய் விட்டுவிட்டு பினாங்கு சென்று அங்கு ஓர் பணக்காரப் பெண்ணை கலியாணம் செய்துகொள்வதாய்ச் சொல்லி அவளிடமிருந்துகொண்டே அவள் அயலூர் போயிருக்கும் சமயத்தில் அவளது ரொக்கம் நகைகள் முதலிய இருபதாயிர ரூபாய் பெருமான சொத்தை எடுத்துக்கொண்டு இப் பட்டணம் வந்துவிட்டாய். நீ இங்கு மிக்க ஆடம்பரமாய் செலவுசெய்துவந்ததினால், கையிலுள்ள பொருளை இழந்து, பணத் தட்டினால் உன்னுடைய பழய தொழிலை ஆரம்பித்துவிட்டாய். இங்கு நீ அனேக பெரிய ஓடல்களில் தங்கிப் பிறர் சந்தேகிக்காவண்ணம் நடந்துகொண்டு இரவில் பெரியமனிதர்களின் அறைகளில் புகுந்து, அவர்களது நகை, பணம், உடுப்பு முதலியவற்றைத் திருட ஆரம்பித்தாய். ஆனால் நீ கண்டுபிடிக்கப்பட்டு அக் குற்றத்திற்காக இவ்வூர் சென்டிரல் ஜெயிலில் இரண்டு

வருஷங்கள் வாழ்ந்துவந்தாய். இங்கு விடுதலையடைந்ததும் மாண்டிலே சென்று ஓர் பணக்காரருடைய ஏக புத்திரியை மணந்துகொண்டாய். ஆனால் அவளது கையிலுள்ள லக்ஷ ரூபாய்களும் மறைந்துவிட்டது போலவே நீயும் மறைந்துவிட்டாய். நீ லாகூரில் உனக்கு சொந்தமில்லாத பணத்தைக் கையாடியதற்காக எட்டு மாதம் சிறைவாசம் பெற்றாய். மறுபடியும் நீ மதுரைக்குச் சென்று ஓர் பிரபுவைப்போல் வசித்துச் சோணபுரம் ஜமீன் ஏக புத்திரியை மணந்துகொண்டாய். உன் பெண்ஜாதியின் பணத்தை ஒரு வருஷத்திற்குள் வீண்செலவு செய்துவிட்டதும் போதாமல் அவளை ராமேசுவரத்தில் ஓர் சத்திரத்தில் அனாதையாய் திடீரென்று இறக்கும்படி செய்து ஓடிவிட்டாய். அது விஷயமாய்ப் போலீஸ்காரர் உன்னைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். உன் வேஷத்தில் அவர்களால் உன்னை அடையாளங் கண்டுகொள்ள முடியவில்லை. மறுபடியும் நீ பம்பாய் சென்று தியாகராஜன் உதவியால் அவனது எஜமானனுடைய நகைகளைத் தட்டிக்கொண்டு கல்கத்தா வந்துசேர்ந்தீர்கள். அவ்விடத்தில் ஓர் பெண்ணை விவாஹம் செய்துகொள்ளும் சமயத்தில் அப் பெண்ணின் பெற்றோர்கள் உன்னைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்ததைக் கண்டு அன்றிரவே அவ் வீட்டிலிருந்து சுமார் நாலாயிரம் ரூபாய் பொருமான நகைகளை எடுத்துக்கொண்டு போய்விட்டாய். இந்த விஷயத்தைக் கல்கத்தா போலீஸ் கமிஷனர் என்னிடம் சொன்னார். அவர்கள் உன்னைக் கண்டுபிடித்து அதற்காக மூன்று வருஷம் தண்டனை அடைந்தாய். நீ விடுதலையடைந்ததும் இப் பட்டணம் வந்து இவ்வேலையைச் செய்ய ஆரம்பித்தாய்.

இப்படித் தன்மேலுள்ள குற்றங்களைச் சொல்லக் கேட்ட அரங்கநாதன் தன் தைரியத்தை விடாமல் "இன்னும் ஏதாவதிருந்தால் அவைகளையும் சொல்லிவிடு." என்றான்.



பத்மநா:—அவைகளையும் சொல்லுகிறேன். இப்பொழுது நீங்கள் செய்துவரும் சூழ்ச்சியால் இக் கன்னிகையின் ஸஹோதரன் கொலைசெய்யப்பட்டான். நானும் உயிர் தப்பியதே தெய்வச்செயலாய்விட்டது. காமாக்ஷிப் பெருமாட்டியைக் கொல்லப்பார்த்தீர்கள். ஆனால் அப்பொழுது தப்பிக்கொண்டாலும் இப்பொழுது உங்கள் கையில் சிக்கிக்கொண்டிருக்கிறாள். அவள் காதலன் விஷமிடப்பட்டு பிராணாபத்திலிருக்கிறான். இப் பாலகிருஷ்ணன் தன் கைப்பொருளை இழந்து உங்கள் கையில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறான்

தியாக:—போதும். உன் வாயை மூடு. உன் பிதற்றலைக் கேட்க எங்களுக்கு இஷ்டமில்லை. நாங்கள் வெளியே போகவேண்டும். விடு வழியை. (என்று மிக்க கோபத்தோடு சொன்னான்.)

உடனே பாலகிருஷ்ணன் அவன்மேல் துப்பாக்கியைக் குறிவைத்தபடியே "நீ காமாக்ஷிப் பெருமாட்டிக்குப் பொய்யாகத் தந்தி கொடுத்து அவளை எங்கோ கொண்டுபோயிருக்கிறாய். அவள் இருப்பிடத்தை நீ உடனே சொல்லவேண்டும். இல்லாவிட்டால் உன்னை இங்கேயே சுட்டுத் தள்ளிவிடுவேன்." (என்று கண்டிப்பாகச் சொன்னான்.)

தியாக:—அவன் இருப்பிடம் எனக்குத் தெரியாது. மேலும் அதைத் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியமுமில்லை.

பாலகி:—நீ அவன் இருப்பிடத்தை உடனே சொல்லாவிட்டால்—

தியாக:—நீ என்ன செய்வாய்?

பத்மநா:—நீ சொல்லாவிட்டால் இதோ இத் துப்பாக்கியை ஆகாயத்தில் சுடவேண்டியதுதான் தாமதம். உடனே நீங்கள் மூவரும் கைதுசெய்யப்படுவீர்கள்.

இதைக் கேட்டதும் அவ்வயோக்கியர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். பத்மநாபன் தான் சொன்னபடியே நடப்பானென்பது அவர்களுக்குத் தெரி

யும். ஆகையால் பயமடைந்து விழிக்கலானார்கள். அவர்கள் குழப்பத்தைக் கண்ட பாலகிருஷ்ணன் அரங்கநாதனைப் பார்த்து "இதுவரையில் உனக்குப் பயந்துகொண்டிருந்தேன். இனி உன் ஆட்டம் என்னிடம் பலிக்காது." என்றான்.

அரங்க:—நான் உனக்கு பத்தாயிர ரூபாய்கள் கொட்டிக் கொடுக்கவில்லையா?

பாலகி:—ஆம்; கொடுத்தாய். என்னை ஏமாற்றி வஞ்சித்தாய். என்னை இப் பத்மநாபனைப்போல் வசிக்கும்படி செய்தாய். முடிவாக என்னை ஒழித்துவிட ஏற்பாடு செய்துவிட்டாய். நல்ல காலமாய் இப் புண்ணியவான் சமயத்தில் வந்துசேர்ந்தார். நீ செய்திருக்கும் குற்றங்களுக்கு இவர் சாக்ஷி சொல்லத் தயாராயிருக்கிறார். மேலும் நீ காமாக்ஷியைக் கொல்ல முயன்றதற்கு இதோ நிற்கும் சோமநாதனே போதுமான சாக்ஷி.

இதைக் கேட்டதும் சோமநாதன் முகம் சவம்போலாகிவிட்டது. கைகால்கள் நடுங்கின. அவன் மற்றவரைப் போல் தைரியசாலியில்லாததினால் நடுங்கிவிட்டான்.

பத்மநா:—காமாக்ஷியின் இருப்பிடத்தை உடனே சொல்லிவிடுங்கள். இல்லாவிட்டால் தெய்வசாக்ஷியாய் இதோ வெடி கிளப்புகிறேன். (என்று துப்பாக்கியை மேலே தூக்கினான்)

ஆனால் அவ்வயோக்கியர்கள் வாய் திறக்கவே இல்லை. அவர்கள் பொறியிலகப்பட்ட எலியைப்போல் விழிக்கலானார்கள். எவனாலே தங்களுக்கு ஆபத்து ஏற்படாதென்று நினைத்திருந்தார்களோ அம் மனிதனே நேரில் வந்து தங்களைப் பிடித்துவிட்டதினால் பயமடைந்து இனி தாங்கள் தப்ப வழியில்லையென்று கண்டுகொண்டார்கள்.

பத்மநா:—என்ன விழிக்கிறீர்கள்? நான் கேட்டதற்கு பதில் வேண்டும். கொலைபாதகர்களே! நீங்கள் உண்



மையைச் சொல்லாவிட்டால் கண்டிப்பாய் கைதுசெய்யப்படுவீர்கள். (என்று அழுத்தமாய்ச் சொன்னான்.)

அம் மூவரும் வாய் திறவாமல் நின்றுகொண்டிருக்க பத்மநாபன் தியாகராஜனைப் பார்த்து "தியாகராஜா! நீ இரவில் வில்லிவாக்கம் சென்று காமாக்ஷி வசிக்கும் வீட்டை கவனித்துக்கொண்டிருந்தாய். உன்னுடைய தந்திரத்தினால் அவள் இருப்பிடத்தைக் கண்டுபிடித்தாய். நானும் உனக்குத் தெரியாமல் உன்னை கவனித்துவந்தேன். ஆனால் நான் அவ்வளவு சமீபத்திலிருப்பது உனக்குத் தெரியாது. மேலும் பம்பாயில் ஆனந்தபவனத்தில் நடந்த ஒரு விஷயத்தை உனக்கும் உன் தோழர்களுக்கும் நினைப்பூட்டட்டுமா?" என்று கேட்டான்.

அரங்க:—போதும். உன் வாயை மூடு. நீ நாசமாய்ப் போக வேண்டும்.

பத்மநா:—இது போதாது. என்னை நீ இவ்விதம் சபிக்கிறாய். ஆனால் சீக்கிரத்தில் நீங்கள்தான் அக் கதியை அடையப்போகிறீர்கள். நான் முழு மூடன். நான் காமாக்ஷியை நேசித்ததால் உங்களால் வீசப்பட்ட வலையில் சிக்கிக்கொண்டேன்.

அரங்க:—காமாக்ஷி உன்னை ஒருபொழுதும் நேசிக்கவில்லை.

பத்மநா:—ஒருக்கால் அப்படியிருக்கலாம். நானும் அவளை உங்களிடமிருந்து காப்பாற்ற முயன்றேன். உங்கள் விஷயத்தில் தலையிடுகிறவர்களுக்குக் கிடைக்கும் அபாயத்தையும் அடைந்தேன். சாந்தலிங்கத்தைப்பற்றி கேழ்வியேயன்றி அவனை நான் பார்த்தது கிடையாது. அவன் காதலித்துக் கல்யாணம் செய்துகொள்ளவிருந்த கோமளாம்பாளென்னும் பெண்ணை நீ பிறர் அறியாமல் தொலைத்துவிட்டு நான் அவளை வஞ்சித்து அழைத்துவந்துவிட்டதாகக் கல்பனை செய்துவிட்டாய். சாந்தலிங்கத்தைக்கொண்டு என்னைத் தொலைக்க முடியாதென்று கண்டு நீயும் தியாகராஜனும் அநேக சி

கும் சோமநாதனும் நான் படுத்துறங்கும் சமயத்தில் என்னை முதலில் குளோரோபாரத்தினால் மூர்ச்சையடையச் செய்து ஊசியால விஷத்தை என் உடம்பில் குத்தி ஏற்றினீர்கள். நானே விஷத்தை ஊசியாகக் குத்தி ஏற்றிக்கொண்டு மாண்டதாக பிறர் நம்பும்படி அவ்வூசியையும் புட்டியையும் என் சமீபத்தில் வைத்துவிட்டு பர்மாவைவிட்டு ஓடிவந்துவிட்டீர்கள். இங்கு வந்ததும என்னைப்போல் ரூபத்திலும உயரத்திலும் சரியாகவிருந்த இந்த பாலகிருஷ்ணனை பலாத்காரஞ் செய்து என்னைப்போல வசிக்கும்படி கட்டாயப்படுத்தினீர்கள். நான் உயிருடனிருப்பதாகவே பிறர் நம்பும்படி அப்படிச் செய்தீர்கள் உங்கள் தந்திரத்தையும் முன் யோஜனையையும் யாரால் கண்டுபிடிக்க முடியும்?

பாலகி:—உன்னைப்போலிருக்கும்படி என்னை ஏற்படுத்திய காரணம் என்ன?

பத்மநா:—எனக்கு என் தகப்பனாரால் இப் பட்டணத்தில் வைத்திருக்கும் சொத்திலிருந்து வருஷம் ஒன்றுக்கு இருபத்திநாலாயிரம் ரூபாய் வருமானம் வருகிறதென்பதை இவர்கள் என்னிடமிருந்து கபடமாய்த் தெரிந்துகொண்டு தந்திரமாய் என்னிடம் ஒரு பத்திரத்தில் கையெழுத்தும் வாங்கிக்கொண்டார்கள். அது என்ன பத்திரமென்பது அப்பொழுது எனக்குத் தெரியாது. அது என் வருமானத்தை என் லாயரிடமிருந்து இந்த அரங்கநாதன் பெற்றுக்கொள்ளும்படியான அதிகாரப் பத்திரமென்பதை இப்பொழுதுதான் தெரிந்துகொண்டேன். நான் அநேகமாய் வெளி நாடுகளில் வசிப்பவனாகையால் நான் இவ்விதம் செய்திருப்பதாக என் லாயர் நம்பிவிட்டார். இவ் விஷயத்தில் அவர்கள் ஜயமடைந்தவுடன் என்னை எவ்விதத்திலாவது தொலைத்துவிட்டு உன்னை அன்னியனென்று பிறர் நம்பும்படி ஏற்பாடு செய்தார்கள். ஆனால் அதி



லிருந்து தப்பிப் பிழைத்தவுடன் என்னிடமிருந்த சில கடிதங்களால் அவ் விஷயத்தைக் கண்டுகொண்டேன். அவ் விஷத்திலிருந்து நான் தப்பிக்கொண்டது மிகவும் அருமை. ஆனால் இவர்கள் எனக்கு விஷமேற்றும்பொழுது யாரோ வருவதாக எண்ணி என்னைக் கொல்லக்கூடிய அளவு ஏற்றாமல் பயந்து ஓடிவிட்டார்கள். ஆகையால்தான் நான் பிழைத்தேன். நான் உடனே பெங்களூருக்குச் சென்று என் உடம்பைத் தேற்றிக்கொண்டு இவர்கள் இங்கே இருப்பதைக் கேள்விப்பட்டு மிகவும் ரகசியமாய் இங்கே வந்துசேர்ந்தேன். வந்ததும் இங்கொரு பத்மநாபன் வசிப்பதாய்த் தெரிந்துகொண்டேன். (இதைக் கேட்டதும் அம் மூவர் முகங்களும் வெளுத்துவிட்டன.) நான் இறந்துவிட்டதாகவே எண்ணி இவர்கள் என் லாயரிடம் பயமன்னியில் பணத்தை வசூலிக்க ஆரம்பித்தார்கள். என் லாயருக்கு என்னை நேரில் தெரியாதாகையால் இவர்கள் சூழ்ச்சி வெகு சுலபமாய் முடிந்துவிட்டது. லாயர் என்னை நேரில் காணவேண்டுமென்று அரங்கநாதனைக் கேட்டபொழுது என்னுடன் பண விஷயமாய்மட்டும் பேசக்கூடாதென்று தப்பு சால்ஜாப்புச் சொல்லி கோமளாம்பாள் விஷயமாய் நான் நடந்துகொண்டதாக அவர்கள் ஏற்பாடுசெய்த விஷயத்தை அவருக்குக் காட்ட பாலகிருஷ்ணனிடம் அழைத்துச் சென்றான். ஆகையால் அரங்கநாதா! நீ எனக்குச் செய்திருக்கும் துரோகத்திற்கு பதில் சொல்லியே தீரவேண்டும். என்னை மறுபடியும் உயிருடன் காண்பீர்களென்று நினைத்தீர்களா? நான் உங்களை கவனித்துக்கொண்டு இவ்வளவு சமீபத்திலிருப்பதாகவாவது நினைத்தீர்களா? நான் உங்களை வென்று ஜயமடைவது நிச்சயம்.

அரங்க:—ஒருவன்மேல் குற்றம் சுமத்துவது வெகு சுலபம். ஆனால் அதை நிரூபிக்கவேண்டும்.

பத்மநா:—ஓ கோ! அப்படியா? அதை நான் நியாய சபை முன் நிரூபிப்பதாக உத்தேசம்.

இதைக் கேட்ட தியாகராஜன் பயந்துபோய் கைகால்கள் நடுங்க பத்மநாபனைப் பார்த்து "ஆகையால் எங்களைச் சிறைப்படுத்துவதாக உத்தேசமோ?" என்று வாய்குழறக் கேட்டான்.

பத்மநா:—ஆம்; அப்படித்தான் செய்யப்போகிறேன். காமாக்ஷி உங்கள்வசம் இருக்கிறாள். அவள் இருப்பிடத்தைச் சொல்ல மறுக்கிறீர்கள். நாழிகையும் ஆகிவிட்டது. வெளியிலிருக்கும் போலீஸ்காரர்களும் கவலைப்படுவார்கள். ஆகையால்— (என்று சொல்லி ஒரு பெரிய நிலைக் கண்ணாடியைப் பார்த்து தனது துப்பாக்கியை நீட்டிச் சுடத் தயாரானான்.)

அரங்க:—சற்றுப் பொறு. நீ செய்யப்போவதை யோஜித்துச் செய். (என்று சொல்லிக்கொண்டு பத்மநாபன் முன் ஓடிவந்தான்.)

பத்மநா: யோஜிப்பதென்ன? சட்டப்படி நடக்கத் தீர்மானித்துவிட்டேன். எட்டநில். (என்று கண்டிப்பாய்ச் சொன்னான்.)

"எல்லாம் முடிந்துவிட்டது." என்று தியாகராஜன் சொல்லிக்கொண்டே தனது மேஜையைத் திறந்து ஏதோ ஒரு வஸ்துவைக் கையிலெடுத்துக்கொண்டு "தயாராய் இருக்கிறீர்களா?" என்று தன் நண்பர்களைக் கேட்டான். அவர்களும் கைகால்கள் நடுங்க 'ஆம்' என்று வாய்குழறச் சொன்னார்கள். அவன் கேள்வியையும் அவர்கள் சொன்ன பதிலையும் கேட்டு, அதைப்பற்றி கொஞ்சம் யோசிக்க, உண்மை புலப்பட்டுவிட்டது. தியாகராஜன் எதிர்பாராதபடி திடீரென்று பத்மநாபன்மேல் பாய்ந்து அவன் கையிலுள்ளதைப் பிடுங்க எத்தனித்தான். அந்த சமயத்தில் பத்மநாபன் கைத்துப்பாக்கி கீழே விழ அதைச் சோமநாதன் எடுக்க ஓடிவந்தான். ஆனால் பாலகிருஷ்ணன் தன் துப்பாக்கியை



அவன்மேல் நீட்டி அவனைத் தடுத்துவிட்டான். உடனே பத்மாக்ஷி அத் துப்பாக்கியை எடுத்துக்கொண்டாள். தியாகராஜனும் பத்மநாபனும் ஒருவரையொருவர் கட்டிப் புரளவே தியாகராஜனுக்கு ஒத்தாசை செய்ய அரங்கநாதன் ஓடிவந்தான். அவனை பாலகிருஷ்ணன் தனது துப்பாக்கியால் தடுத்துவிட்டான். இதற்குள் சோமநாதனும் ஒத்தாசைக்கு வர பத்மாக்ஷி அவனைத் தடுத்துவிட்டாள். கடைசியாக பத்மநாபன் தியாகராஜன் கையிலிருந்ததைப் பிடுங்கிக்கொண்டு தன் மூக்கிலிருந்து வழிந்து ஓடிவரும் இரத்தத்தையும் கவனிக்காமல் பத்மாக்ஷியிடமிருந்து துப்பாக்கியை வாங்கிக்கொண்டு "பயலே! இதுவா உன் உத்தேசம்? எல்லோரையும் இதனால் கூண்டோடு கைலாஸம் அனுப்பவோ பார்த்தாய்?" என்று சொல்லிவிட்டு பாலகிருஷ்ணனைப் பார்த்து தன் கையிலுள்ள 'பாம்' என்னும் வெடிகுண்டைக் காட்டி "இது கல்கத்தாவிலுள்ள ராஜாங்க விரோதக் கூட்டத்தாரால் கண்டுபிடிக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டது. அக்கூட்டத்தில் வீரபத்திரன் சேர்ந்திருந்ததினால் ஐந்து வருஷம் தண்டனை அடைந்தான். அதுமுதல் அவன் இவர்கள் கோஷ்டியில் சேர்ந்திருக்கிறான்." என்றான்.

அவ் வெடிகுண்டினால் தங்கள் எதிரிகளைக் கொன்று தாங்களும் இறக்க ஏற்பாடு செய்தது விளங்கியதைக் கண்ட அவர்கள் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

பத்மநாபன் அக் குண்டைத் தன் மடியில் பத்திரமாக வைத்துக்கொண்டு "நீங்கள் ஒரே சமயத்தில் உங்களோடு எங்களையும் கொல்ல முயற்சி செய்ததினால் நீங்கள் மிகவும் அபாயமுள்ளவர்களென்பதில் ஆக்ஷேபணை கிடையாது. ஆகையால் உங்களை போலீஸ் பந்தோபஸ்தில் வைக்கவேண்டியது அவசியம். பாலகிருஷ்ணா! நீ கீழே போய் கதவைத் திற." என்றான்.

உடனே தியாகராஜன் அவனை வெளியே போகவிடாமல் வழியை மறித்துக்கொண்டு "பாலகிருஷ்ணா! சற்றுப்

பொறு. நமக்குள் ஓர் ஏற்பாடு செய்துகொள்வோம். நான் காமாக்ஷியின் இருப்பிடத்தைச் சொல்லிவிடுகிறேன்." என்று பயத்தோடு சொன்னான்.

பத்மநா:—உங்களுடனா ஏற்பாடு? நான் சொல்லுவதைத் தான் நீங்கள் கேட்கவேண்டும். ஓர் கொலை செய்தவனைக் கொலை செய்வதுதான் நியாயம். பாலகிருஷ்ணா! போய் கதவைத் திற. நான் உடனே வேட்டுக் கிளப்புகிறேன்.

இதைக் கேட்ட பாலகிருஷ்ணன் கீழே சென்று கதவைத் திறந்தான். அதே சமயம் பத்மநாபன் நிலைக் கண்ணாடியைப் பார்த்துச் சுட கண்ணாடி சுக்கல் சுக்கலாய் பூமியில் விழுந்தது. உடனே சாதாரண உடை அணிந்திருந்த இரண்டு போலீஸ் உத்தியோகஸ்தர்களும் ஆறு கான்ஸ்டேபிள்களும் மெத்தையை நோக்கி தடதடவென்று ஓடி வந்தார்கள். அவர்கள் வரும் சத்தத்தைக் கேட்ட அரங்கநாதன் தன் சட்டைப் பையிலிருந்து பெப்பர்மெண்டுபோன்ற ஒரு வஸ்துவை எடுத்துத் தன் வாயில் போட்டுக்கொண்டு விழுங்கிவிட்டு மற்றொன்றை தியாகராஜனிடம் கொடுத்து விழுங்கச்செய்து பத்மநாபனைப் பார்த்து "மனுஷ்யப் பதரே! நீ என் சரீரத்தைக் கைதுசெய்யலாமேதவிர என்னை உயிருடன் ஒருவராலும் தொடமுடியாதென்பதைத் தெரிந்துகொள்." என்றான். சோமநாதன் ஒன்றும் தோன்றாமல் கற்சிலைபோல் அசைவற்று நின்றான். போலீஸ்காரர் உள்ளே வர அம்மூவரையும் கைது செய்யும்படி பத்மநாபன் உத்திரவு செய்தான். இவ் வார்த்தையைக் கேட்ட அரங்கநாதன் தன் கைகளைத் தூக்கிக்கொண்டு ஒரு பைத்தியக்காரனைப்போல் பேய் சிறிப்பாய் சிறித்துக்கொண்டு முன்னால் வர எத்தனிக்கையில் கால் தடுமாறி பூமியின்மேல் தடாரென்று குப்புற விழுந்து மரணாவஸ்தைக்கு உள்ளானான். அக் காக்ஷியைக் காண சகிக்காத பத்மாக்ஷி தனது கண்களை மூடிக்கொண்டாள். தியாகராஜன் மேஜையின் மேல் சாய்ந்துகொண்டு நடக்கும் விஷயங்களை கவனித்துக் கொண்டிருக்க திடீரென்று கீழே விழுந்து கைகால்களை



உதைத்துக்கொண்டு வாயினால் ரத்தத்தைக் கக்கிக்கொண்டு மாண்டான். அரங்கநாதன படும் மரணாவஸ்தையை மற்றவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில் அவனும் தனது கைகால்களை முறுக்கிக்கொண்டு பந்துபோல் கொஞ்சம் மேலே கிளம்பிப் பிணமாய்க் கீழே விழுந்தான். அவர்கள் தங்கள் உயிரைப் பிறர் வாங்காதபடி தாங்களே போக்கிக் கொண்டார்கள். வீண் பிடிவாதமே அவர்கள் முடிவிற்குக் காரணமாயிற்று. சோமநாதன் கைதுசெய்யப்பட்டுப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகப்பட்டான்.

---

## அத்தியாயம் 30.

மேலே சொன்ன சம்பவங்கள் நடந்து இரண்டு நாட்களாகின. நமது காமாக்ஷிப் பெருமாட்டி தனது மாளிகையின் மேல்தளத்தில் நின்றுகொண்டு அவ்வந்திப்பொழுதின் இள வெய்யிலில் மாளிகையின் எதிரிலுள்ள வீதியில் சிறுவர்கள் சந்தோஷமாய் விளையாடிக்கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் அன்றையதினம்தான் காலையில் மாளிகைக்குத் திரும்பிவந்தாள். பாலகிருஷ்ணன், கைதுசெய்யப்பட்ட அவ்வயோக்கியன் சோமநாதனிடமிருந்து, காமாக்ஷியின் இருப்பிடத்தை மறுநாள் காலை ஆறு மணிக்குப் போலீஸ் ஸ்டேஷனில் தெரிந்துகொண்டான். உடனே தண்டையார்பேட்டைக்கு ஓர் வண்டியை வைத்துக்கொண்டு சென்று அங்கு ஒதுப்புறமாயுள்ள ஓர் சிறு குடிசையை அடைந்தான். அதன் கதவு பூட்டப்பட்டிருந்ததினால் தன் முழு பலத்தோடு கதவைத் தள்ள கதவு நிலையோடு பெயர்ந்துவிட்டது. பாலகிருஷ்ணன் உட்சென்று பார்க்க அங்கோர் மூலையில் கைகால்கள் கட்டுண்டு வாயில் துணி அடைக்கப்பட்டு பிரக்ஞையற்றுக் கிடந்த காமாக்ஷியைக் கண்டு திடுக்கிட்டான். உடனே அவள் வாயிலிருந்த துணியை எடுத்துவிட்டு கட்டுகளை அவிழ்த்து பக்கத்திலிருந்த ஓர் காபி ஹோட்டலுக்குச் சென்று கொஞ்சம்

காபியும் ஒரு சொம்பில் குளிர்ந்த தண்ணீரும் கொண்டு வந்து அத் தண்ணீரை அவளது முகத்தில் தெளித்து விசிறியால் விசிறி உபசாரம் செய்து கொஞ்சம் காபியை அவள் வாயில் ஊற்றினான். காமாக்ஷி அவன் செய்த உபசாரத்தினால் கொஞ்சம் கொஞ்சமாகத் தன் நினைவையடைந்து கட்டுகளால் விறைத்துப்போயிருந்த தன் கைகால்களை நீட்டி வெகு கஷ்டத்துடன் காபியை அருந்தினாள். சற்று களை தெளிந்ததும் பாலகிருஷ்ணன் அவளைத் தன் வண்டியிலேற்றிக்கொண்டு சுந்தர விலாஸம் வந்துசேர்ந்தான். அவ்விடம் பத்மாக்ஷி தனக்காகக் காத்துக்கொண்டிருப்பதைக் கண்டு சந்தோஷித்து இருவருமாய் காமாக்ஷி சௌக்கியமடையும் வழியைச் செய்தார்கள். இதற்குள் மணியும் ஒன்றாகியது. உடனே காமாக்ஷிக்கு ஆகாராதிகளைக் கொடுத்து அவள் மிகவும் பலஹீனமாயிருந்தமையால் அவளை ஓர் படுக்கையில் படுக்கவைத்து அவளிடம் நடந்த சமாசாரங்களை அதிசயமாகச் சொன்னார்கள். காமாக்ஷி இவைகளைக் கேட்டு சந்தோஷித்துக் களைப்பால் தூங்கிவிட்டாள்.

அப்படித் தூங்கிய காமாக்ஷி இரவு எட்டு மணிக்குக் கண்ணை விழித்துக்கொண்டாள். அவளைக் கவலையுடன் பாதுகாத்துக்கொண்டிருந்த பத்மாக்ஷி உடனே அவளுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்துகொண்டிருக்க பாலகிருஷ்ணனும் உள்ளே வந்தான். எல்லோரும் இராப் போஜனம் உண்ட பிறகு திருவேங்கடத்தின் நிலைமையைப்பற்றி அவன் பூர்ண குணமடைந்துவிட்டதாகவும் ஆனால் பலஹீனமாயிருப்பதாயும் கொஞ்சநாளில் வெளியே வந்துவிடுவானென்றும் பாலகிருஷ்ணன் சொல்ல அதைக் கேட்ட காமாக்ஷி ஆனந்தமடைந்தாள். பிறகு காமாக்ஷி சிறையாக்கப்பட்ட விஷயத்தைக் கேட்க, தான் தந்தியைப் பார்த்து பயந்து உடனே பட்டணம் புறப்பட்டு ராயபுரம் ஸ்டேஷனில் இறங்கியதாகவும் அவ்விடத்தில் சோமநாதன் தன்னைக் கண்டு அரங்கநாதன் தன்னை முக்கியமாய் உடனே பார்க்கவேண்டுமென்றே அவளை அனுப்பியதாகவும் சொல்ல அவன் வார்த்தையை நம்பி அவன் வண்டியிலேறிக்கொண்டதாகவும் உடனே அவன் குளோரோபாரத்தினால் தன்னை மூர்ச்சையடையச் செய்ததாகவும் பிறகு கண்ணை விழித்துப் பார்க்க பாலகிருஷ்ணன் தன்னைப் பார்த்த ஸ்திதியில் இருக்கக் கண்டதாகவும் சொன்னாள். பிறகு பத்மாக்ஷியும் காமாக்ஷியும் ஓர் அறையில் படுக்க பாலகிருஷ்ணன் தன் அறையில் படுத்துறங்கினான்.



மறுநாட் காலையில் காமாக்ஷி கொஞ்சம் ஆகாரமருந்திவிட்டு பாலகிருஷ்ணனுடன் திருவேங்கடத்தின் இருப்பிடம் சென்றாள். திருவேங்கடம் பத்மநாபன் கொடுத்த விஷமூறியினால் பூர்ண சுகமடைந்தாலும் பலஹீனத்தினால் மெத்தைமீது ஓர் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்தான். பாலகிருஷ்ணனும் காமாக்ஷியும் உள்ளே வர அவர்களை அன்புடன் வரவேற்று தான் குணமடைந்துவிட்டதாகவும் தன்னைப்பற்றி இனி கவலைப்படவேண்டாமென்றும் காமாக்ஷியிடம் சொல்லி நடந்த சமாசாரங்களை பாலகிருஷ்ணன் தன்னிடம் சொன்னதாகவும் காமாக்ஷி இரண்டாம் முறை காப்பாற்றப்பட்டதைப்பற்றி மிகவும் சந்தோஷப்படுவதாகவும் சொன்னான். பிறகு சற்று நேரம் அவனிடமிருந்துவிட்டு காலை எட்டு மணிக்கு பாலகிருஷ்ணனுடன் மாளிகை வந்துசேர்ந்து பாலகிருஷ்ணனை சுந்தர விலாசத்திற்கு அனுப்பிவிட்டுத் தனக்கு ஒன்றும் ஆபத்து நேரிடாததுபோல் நடித்து தன் தகப்பனுடன் அன்று பகல் பொழுதைப் போக்கி சாயங்காலம் முன் சொன்னவண்ணம் உப்பரிகையில் உலாவிக்கொண்டிருந்தாள். அப்படியிருக்கும் சமயத்தில் அவளது தோழி விஜயா அவ்விடம் வந்து பத்மநாபன் அவளைப் பார்க்கவேண்டிக் கீழே காத்துக்கொண்டிருப்பதாய்ச் சொன்னாள்.

காமாக்ஷி:—அப்படியா? அவரை உடனே என் அறைக்கு அழைத்துக்கொண்டுவா. நானும் இதோ வந்துவிட்டேன்.

பத்மநாபன் உள்ளே வரக் கண்ட காமாக்ஷி அவனை மிகவும் அன்போடு வரவேற்று உபசரித்து அவனை ஓர் நாற்

காலியில் உட்காரும்படி சொல்லி தானும் அவனுக்கு எதிரில் ஓர் நாற்காலியில் உட்கார்ந்தாள்.

பத்மநா:—காமாக்ஷி! நீ தப்பிப் பிழைத்துவந்ததைப்பற்றி மிகவும் சந்தோஷம். அவ்வயோக்கியர்கள் கையில் நீ அகப்பட்டுக்கொண்டதைக் கேட்க மிகவும் வருத்தப்பட்டேன். நீ தப்பித்துக்கொண்டது தெய்வாதீனம். எல்லாம் ஈசன் செயல்.

காமாக்ஷி:—தாங்கள் என்னைக் காப்பாற்றியதற்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்? நேற்றையதினம் இரவு பாலகிருஷ்ணன் எல்லாவிஷயங்களையும் சொன்னான். தாங்கள் அவர்களின் குற்றங்களைக்கொண்டே அவர்களை எதிர்த்தீர்களென்றும், அவர்கள் தப்ப வழியின்றி தற்கொலை செய்துகொண்டார்களென்றும் தங்களைப்போல் அவன் நடிக்க ஏற்பாடு செய்ததின் காரணத்தையும் சொன்னான்.

பத்மநா:—இதுகளைக் கேட்க உனக்கு ஆச்சரியமாக இல்லையா? இன்னும் அதிகமாக ஆச்சரியப்படக்கூடிய சமாசாரத்தையும் சொல்லவே வந்தேன்.

இதைக் கேட்டதும் காமாக்ஷி அது எந்த விஷயத்தைப் பற்றியதோவென்று யோஜிக்கலானாள். ஒன்றும் விளங்காமல் விழித்தாள். அவள் விழிப்பதைக் கண்ட பத்மநாபன் "காமாக்ஷி! எல்லாம் பாலகிருஷ்ணனைப்பற்றியதே. இன்றையதினம் காலையில் அரங்கநாதன் வீட்டைப் பரிசோதித்துப் பார்த்தேன். அவ்விடத்தில் ஓர் அலமாரியில் ரகசியமான ஒரு அறை இருந்தது. அதை ஆராய்ந்து பார்க்க சில பத்திரங்களும் கடிதங்களும் இருந்தன. பாலகிருஷ்ணன் கடன் வாங்க எழுதிக்கொடுத்திருந்த சுமார் இரண்டு லக்ஷ ரூபாய்களுக்குக் கடன் பத்திரங்களும் அதில் இருந்தன. அவைகள் அரங்கநாதனுக்கே வெவ்வேறு பெயர்களில் எழுதிக்கொடுக்கப்பட்டவைகளாயிருந்தன. மேலும் பாலகிருஷ்ணன் கல்கத்தா பாங்கியில் கட்டியிருந்த நான்கு லக்ஷ ரூபாய்களும் இப்பொழுது வட்டியும் முதலும் சேர்ந்து ஐந்து லக்ஷமாகிறது. அந்த பாங்கியும் நல்ல நிலைமையில் இருக்கிறது. அது முழுகிப்போனதாக அரங்கநாதனே தந்தி கொடுத்து பாலகிருஷ்ணனைத் தனது வலையில் சிக்கிக்கொள்ளும்படியாகச் செய்தான். பாலகிருஷ்ணன் போலீசுக்குப் பயப்படவேண்டாம். அவன் முன் ஸ்திதிக்கு வந்துவிட்டான். இது விஷயத்தை அவனிடம் சொல்லுவதற்கு முன்னால் உன்னிடம் சொல்லவேண்டுமென்றே வந்தேன். அவனிடம் இதை நான் நேரில் சொல்லி அப்பத்திரங்களை அவனைக்கொண்டே அழிக்கச்செய்கிறேன்." என்றான்.



காமாக்ஷி:—இது மிகவும் விந்தையாக இருக்கிறதே. அரங்கநாதனின் சூழ்ச்சிகளை யாரால் கண்டுபிடிக்கமுடியும்? அவன் என்னைக் கொல்ல எவ்வளவோ முயன்றான். நான் அவனுக்கு ஒரு கெடுதலும் செய்யவில்லை.

பத்மநா:—எனக்கு வெகுகாலம் வரையில் உண்மை புலப்படவில்லை. உன்னை நான் முதலில் சந்தித்தபொழுது அவர்களுக்கு சிநேகிதனாக இருந்தேன். அவர்கள் மிகவும் கண்ணியம் வாய்ந்தவர்களென்றே நம்பியிருந்தேன். ஒருநாள் அரங்கநாதன் உன்னைப்பற்றி என்னிடம் பிரஸ்தாபித்தான். நானும் உன்னைப்பார்த்திருப்பதாகச் சொன்னேன். அதனால்தான் உன்னை அவ்விடம் அழைத்துக்கொண்டுபோய் அறிமுகம் செய்துவைத்தது. நீ திருவேங்கடத்தை நேசிப்பது தெரியாமல் உன்னை நேசிக்க ஆரம்பித்தேன். நீயும் அதை கவனிக்கவில்லை. நான் அப்படி நடந்துகொண்டதைப்பற்றி என்னை மன்னிக்கவேண்டும். அவர்கள் என்னைக் கொன்றுவிட்டு என் வருமானத்தைக் கொண்டு பெரிய காரியங்கள் செய்ய ஏற்பாடு செய்துகொண்டிருந்ததை நான் கவனிக்கவில்லை. மேலும் அவ்வரங்கநாதனைக் குற்றவாளிகளின் அரசனென்றே சொல்லவேண்டும்.

காமாக்ஷி:—அவர்கள் ஏன் என்னையும் திருவேங்கடத்தையும் கொல்லத் தீர்மானித்தார்

பத்மநா:—அது அவர்கள் சூழ்ச்சிகளில் ஒன்று. தியாகராஜன் உனது மாளிகையில் உத்தியோகத்திற்கு வந்ததும் உனது பிதாவின் அந்தரங்க நண்பனுகி விட்டான். மேலும் தற்செயலாய் உன பிதாவின் ரகசியத்தைக் கண்டுபிடித்துவிட்டான். அதுதான் இவ்வளவு ஆபத்திற்குங் காரணம். நீ அவர்கள் குணத்தை அறியாமல் அவர்களுடன் சிநேகம் வைத்துக்கொண்டாய்.

காமாக்ஷி:—அவர்கள் உங்களையும் என்னையும்பற்றிக் கெடுதலாகச் சொல்ல ஆரம்பித்ததும் அவர்களின் விரோதியாய்விட்டேன்.

பத்மநா:—அது எந்த விஷயத்தைப்பற்றியதோ?

காமாக்ஷி:—நீங்கள் என்னை அவர்களுக்கு அறிமுகம் செய்துவைத்து கொஞ்சநாட்களுக்கெல்லாம் தியாகராஜனின் குணத்தைக் கண்டுவிட்டேன் அப்படி நான் தெரிந்துகொண்டதாக அவன் அறிந்ததும், ஒருநாள் நான் உத்தியானவனத்தில் உலாவிக்கொண்டிருக்கையில் காதல் விஷயமாய் உங்களையும் என்னையும்பற்றி என்னிடம் சொல்ல ஆரம்பித்தான். அதை நான் மறுத்துக் கண்டித்தேன். அதற்கு அவன் தான் அரங்கநாதனின் தோழனென்பதை மாளிகையில் வெளியிடும் பக்ஷத்தில் அடுத்த நிமிஷம் நானும் நீங்களும் காதலித்திருப்பதாக அவன் எண்ணிக்கொண்டிருக்கும் விஷயத்தை என் தகப்பனரிடம் சொல்லிவிடுவதாகப் பயமுறுத்தினன்.

பத்மநா:—அவ்வயோக்கியன் அப்படியா சொன்னன்?

காமாக்ஷி:—ஆம்; நான் என்ன செய்வது? அவர்கள் குணம் தெரிந்தும் அதை வெளியிட பயந்தேன். அப்படி நான் சொல்லியிருக்கும்பக்ஷத்தில் என் மானத்தைப் போக்கியிருப்பார்கள். நான் எதைச் சொன்ன [illegible]ன் சொல்தான் அம்பலத்தில் வரும். [illegible] அவர்கள் வீட்டில் அதிக

188794